# பல்வகைப் பாடல்கள்



கி. வா. ஜகந்நாதன்

அமுத நிலையம்

# பலவகை விளையாடல்கள்

☆

கி. வா. ஜகந்நாதன்

☆

அமுத நிலையம் லிமிடெட்
46, ராயப்பேட்டை ஹைரோடு,
சென்னை—600 014

(c) உரிமை பதிவு
அமுதம் எண்: 281
முதற் பதிப்பு: டிசம்பர், 1984.

விலை ரு - 8-50

PRINTED AT VIMAL £ CO, MADRAS - 5.

# முன்னுரை

நாடோடிப் பாடல்களை 40 ஆண்டுகளுக்கு மேலாகத் தொகுத்து வருகிறேன். சொற்பொழிவுகளுக்காகச் செல்லும் இடங்களில் உள்ள பெண்களையும், முதியவர்களையும் கண்டு பேசி அவர்களிடம் நாடோடிப் பாடல்களைக் கேட்டு, அறிந்து எழுதிக் கொண்டேன்.

இந்தப் புத்தகத்தில் பலவகை விளையாட்டுப் பாடல்கள் அடங்கியுள்ளன. அட்டலங்காய், அம்மானைப் பாட்டு, என்றாலே முடியாது, ஏழாங்கல் பாட்டுக்களி, ஒரு புட்டான், ஓடிவிளையாடுதல், கட்டிக்கொள்ளும் விளையாட்டு, கட்டிய கையை வாங்கும் பாட்டு, கண்கட்டி விளையாடல், கண்ணா மூச்சு கல்லாங்காய் விளையாட்டு, காயை எடுத்தல், கழற்கோடிப் பாட்டுக்கள். காய் ஆடற் பாட்டுக்கள், கில்லாப் பறண்டி, கும்மிகள். குழுக்கு விளையாட்டு, குழந்தை காய் ஆடுகிறது. கூழாங்கல் பாட்டு. கை கொட்டுதல், கை தட்டி விளையாடல், கையில் அறையும் விளையாட்டு, கையில் குத்தி விளையாடுதல், கையை மடக்கல், கொட்டடி, கோடு கோலி விளையாட்டு, சண்டை அபிநயம், சுற்றி விளையாட்டு, தட்டா மாலை, பந்தாடுதல், தொடை தொட்டு விளையாடுதல், துரோபதை பந்தடி, தோட்ட விளையாட்டு, நாலு கால் விளையாட்டு, பந்தடிப் பாட்டு, மயிலாடு, சடுகுடு, வாழைப் பழம், பள்ளிக்கூடப்பிள்ளையின் விளையாட்டு, சாராயம், காபிப்பாட்டு, லட்டுப்பாட்டு, தம்பளிச் சொரு விடுவது, கறி, கறிச்சுவை, அரிசிக் கஷ்டம், சோறு தின்னலாம் அரிசி, விருந்து வருணனை, விருந்து விமரிசை, கத்தரிக்காய் பொறியல், நெய் ஊற்று, வடைப்பாட்டு, தோசைப்பாட்டு துண்டு துணுக்குகள், காபிக்கொட்டை, கள்ளுப் பாட்டு, களிவெறி, சோறுபோடு, நாகப்பழம் எண்ணுவது,

எண்ணிக்கை வாய்ப்பாடு, மணிப்பிரவாளம், ஒன்று, இரண்டு, ஐந்து பாஷைப்பாட்டு, ஒன்று இரண்டு பாட்டு, அம்மாவும், அப்பாவும், சவாரி வரும் தம்பி, அக்காள் வித்தியாசம், பாட்டி, பாட்டி எங்கேபோகிறாய்? ஆனை ஆனை, இங்கு கேட்கும் குழந்தை, குழந்தைக்குப் பழம், குழந்தைக்கு மருந்து, குழந்தைகள் வேடிக்கைப்பாட்டு, குழந்தை குதித்து விளையாடல், குழந்தை சாய்ந்தாடுதல் குழந்தைப்பாட்டு, குழந்தைத் தலையாட்டுதல், குழந்தையைத் தேடுதல், குழந்தையைப் பால் உண்ண அழைத்தல், கையை விடு, கை வீசுதல், சாய்ந்தாடல், குழந்தைக்குத் தலைவாரிப் பின்னுதல், தவலைச்சோறு, தோள் வீசுதல், பிள்ளை பெறுதல், தாலாட்டுப்பாடல்கள் என்ற பல வேறு தலைப்புக்களில் இந்தப் பாடல்கள் உள்ளன.

இன்னும் நாடோடிப் பாடல்களையும், பழமொழிகளையும் சேகரித்துக் கொண்டு வருகிறேன். இவற்றை ஆங்கிலத்தில் 'Folklore' என்பார்கள்.

முன்னர் இவற்றின் மூன்று தொகுப்புக்கள். ஏற்றப் பாட்டுகள், திருமணப்பாடல்கள், தெய்வப்பாடல்கள் என்று வகைப்படுத்தித் தலைப்பிட்டு வெளியிட்டுள்ளேன். திருவருள் துணை கூட்டுமாயின், அனைத்தையும் வெளியிட்டுத் தமிழ் நாட்டு நாடோடி இலக்கியத்துக்கு என்னுலியன்ற சிறு தொண்டு செய்வேன். மக்களின் நல்லாதரவும், குருவருளும் துணை செய்ய வேணும்.

'காந்தமலை'
12-12-1984.

அன்பன்.
கி. வா. ஜகந்நாதன்.

# பலவகை விளையாடல்கள்

## அட்டலங்காய்

[திண்ணையில் காலைத் தொங்கப்போட்டுச் சிறு பிள்ளைகள் உட்கார, அவர்கள் முழங்காலைத் தடவிப் பாடும் பாட்டு.]

அட்டலங்காய் பொட்டலங்காய்,
சாதிகெட்ட மாதுளங்காய்.*

★

அட்டலங்காய் சுட்டுப் போட்டு,
மாவலங்காய் மறைச்சுப் போட்டு,
எட்டி எட்டிப் பார்ப்பானேன்?
ஏணி வச்சுப் பார்ப்பானேன்?
பட்டு மாமியார் நெருப்பு இருக்கோ?
நெருப்பு இல்லை.

(2)

தாடுத் தாடுத் தாம்பாளம்,
தடுக்கு மேலே கோபுரம்;

சிங்கப் பெருமாள் பட்டணம்,
சீதா தேவி கால்நீட்டு;
—மாட்டேன்.

மாட்டேன்னு வல்லேன்னு,
மஞ்சளைப் பூசிக் குறத்தி அம்மா கால்நீட்டு;

---

(பா—ம்) மாப்பிளங்காய்.

கொத்தங்காய்க் கூடையிலே,
கொத்துச் சாவி இடுப்பிலே;

## அம்மானைப் பாட்டு

1. பொறுக்கு சிறுக்குருவி, போவோம் மணக்குருவி,
'தந்தோம் தலைக்குருவி, தாயில்லாப் பேய்க்குருவி,
பேக்குருத்தா வாசலிலே, பெண்பிறந்தால் ஆகாதோ?"

2. பொறுக்கி, சிறுக்கி, போறுளாம் தண்ணிக்கி,
தண்ணித் துறையிலே, தவுந்த மணலிலே,
புள்ளைக்கு அழுவுருளாம், பூமா தேவி அம்மா.

3. பொறுக்கி வீட்டுக்குப் போனேன்;
பொங்கச் சோத்தைப் போட்டார்;
வாஇன்னு அழைச்சா, வர்ணத்தடுக் கிட்டார்;
குந்துப் பருப்பிட்டார்; கூசாமே வார்த்தார்;

4. தூப் பொறுக்கிக் காட்டிலே, தூதளங்காய் விக்குது;
மாம் பொறுக்கி காட்டிலே, மாதளங்காய் விக்குது;
தலபொறுக்கிக் காட்டிலே, கடிகாரங்காய் விக்குது.

5. கட்டு ஒண்ணு, கருங்கட்டை ரெண்டு,
வேலங் கட்டை மூணு, விறகொடிக்கப் போனேன்;
கத்தாளை முள்ளு கொத்தோடே தச்சுது.

6. அலவாத்தங் கரையிலே, அலகுபறிக்கப் போனேன்;
பாலாத்தங் கரையிலே, பன்னண்டு தென்னமரம்;
காயுமில்லை, பூவுமில்லை, காக்கா நிற்க நிழலுமில்லை.

## என்னாலே முடியாது

தோம் தோம் என்ற தொந்தக் கோனாரே,
தீம் தீம் என்ற திந்தக் கோனாரே,

ஆடு கெடக்குது மந்தையிலே; — அஞ்சு
குட்டி கெடக்குது குண்டுக் குள்ளே;
இந்தட்டை மேய்க்கவும் என்னாலே முடியாது;
அந்தட்டை மேய்க்கவும் என்னாலே முடியாது.

(2)

ஏட்பு இல்லாப்பூ எங்களண்ணிக்குத் தாழம்பூ.
ஊரார் அண்ணிக்கு ஊமத்தம்பூ.

(3)

அம்மானை, அம்மானை, ஆடிவரும் அம்மானை,
முங்கேவரும் அம்மானை, முன்னேவரும் அம்மானை,
சாஞ்சுவரும் அம்மானை, சண்டைபோ டம்மானை;
ஒத்தப்புள்ளைத் தாச்சிக்கு ஒண்ணு போச் சம்மானை;
ரெட்டைப்புள்ளைத் தாச்சிக்கு ரெண்டு போச் சம்மானை;
உருகஞ்சி, உருகஞ்சி, நடுகண்ட மாலை,
சங்கு கோத்து, சரடுவந் தம்மானே.

(4)

அம்மானை அம்மானை — ஆடிடும் அம்மானை,
வள்ளை அம்மானை — ஓடிடும் அம்மானை,
ஒருக்குந்து இருக்குந்து — திருக்குந்து மாலை,
சங்குமாலை சரடுகோத்து—நாத்தனார் ஆத்துகிட்குப் போனேன்;
யாரங்கே, யாரங்கே என்றாள்; நான்தான் மதனி என்றேன்;
குளிக்கப்போ குளிக்கப்போ என்றாள்; குளமெங்கே,
குளமெங்கே என்றேன்;
பீக்குட்டையைக் காட்டிவிட்டாள்....
துறைஎங்கே, துறைஎங்கே என்றேன்; எருமை முதுகை
காட்டிவிட்டாள்;
புடவைஎங்கே, புடவைஎங்கே என்றேன்; பீத்தக் கந்தலை
எடுத்துக்குடுத்தாள்;

மஞ்சளெங்கே, மஞ்சள் எங்கேஎன்றேன்; கோரைக் கிழங்கை எடுத்துக்குடுத்தாள்;
ஒத்தைக்கொட்டை-முத்துக்கொப்பு.
மஞ்சள் மாடம் - கூடம் பொன்னி,
நன்னி நவரபவர - பந்துகள் ஆயிரம்.

## ஏழங்கல் பாட்டு

### (1)

1. முக்கோட்டு ராவணு, முத்துச் சரவணு,
2. முக்கே முறிச்சுக்கிட்டு, தேரைத் திருப்பிக்கட்டு.

★

1. நான்கு நரியலே, சோளம் பொரியலே;
2. நான்கு சங்கிலி பொம்பரம், நான் வளர்த்த கைம்மரம்;
3. நான்கு நடுத்தட்டு, தேங்காய் பதினெட்டு,
4. நான்கடா மச்சான் தூங்குருன், நல்லவெல்லம் கேக்கருன்.

★

1. ஐவர் அரைக்கும் மஞ்சள், தேவர் குளிக்கும் மஞ்சள்;
2. அஞ்சிலே பிஞ்சிலே தட்டாத்தி, அழுக்கெடுக்கிற வண்ணாத்தி;
3. ஐவேர் குத்தி அரக்காயி-கொப்பை வச்சுக்குடி பேருள்;
4. அஞ்சு களாக்காய் தும்பைப்பூ-அதுமேல வாராள் ராசாத்தி.

★

1. ஆக்கூரு அடிவாழை, அண்ணன் தம்பி பொரிவாழை,
2. ஆக்கூரு மச்சான் பாக்கு வச்சான்; பாக்கிலே ரெண்டு பணத்தை வச்சான்;

கூறும் கூறும் சித்தப்பா; கூழு குடிக்கற பெரியப்பா;

3. ஆக்கூ ருத்தாள் வாசலிலே, பாக்கை வெட்டிப் பந்தலிட்டேன்;

4. ஆஞ்கூறுத்த சிவபாக்கியம் ஆண்புள்ளை பெத்தாள் கைலாச்சம்.

★

(2)

கட்டேயோ ராமா, பட்டாபி ராமா,
ஈரியோ ராகவா, என்தம்பி கேசவா,
மாட்டை மேய்க்கிற ராகவா,
முக்கண்ண ரானவ சங்கரனே,
மூணு தலையும் விரிச்சவனே,
பாம்பைக் கண்டு பயந்தவனே,
நாங்குத் தோங்கு பம்பரம்,
சீதா ளாடும் சிதம்பரம்,
ஐவரளி பசுமஞ்சள்,
அக்குரு பட்சி தோப்பிலே,
ஆருள் வேதம்....
ஏழோன் ஏழு ஏழைப் பொண் ஜானகி,
எங்கள் பொண் ஜானகி,
மாட்டுப் பொண் ஜானகி மகராஜி;
எட்டாண்டி அவன் கெட்டாண்டி;
எட்டுக்குள்ளே அவள் மறைஞ்சான்டி;
மன்னுக்குள்ளே அவன் மறைஞ்சாண்டி;
மண்ணையும் சாம்பலையும் தின்னுண்டி;
ஓம்பாலிம்பா சந்தனம்பா,
சமைச்சுப் போட்டாத் தின்பா;
பத்திலே வந்து புடுங்காதே;
பாம்புக்குச் சட்டம் போடாதே;
வீர பத்திர சாமிக்கு
வெள்ளிக் கோலாட்டம்.

(3)

பொறுக்கி, சிறுக்கி, போருளாம் தண்ணிக்கு;
தண்ணிக்குடம் தலைமேலே....
இரி இரிட்சிக்கோ, பூவைப் பறிச்சுக்கோ;
பொட்டியிலே வச்சுக்கோ;
முக்கோடு, தக்கோடு, பாவற்காய்,
மூல இல்லாத ஏலக்காய்,
நான்கே நடந்துவரப் பாம்பே படர்ந்துவர,
அஞ்சு களாக் காய், தும்பைப்பூ,
அதிலே ஒரு ஜன்னல்;
ஆக்கூரு அடிவாழை;
அண்ணன் தம்பி பெருவாழை;
ஏழு என்னும் காட்டிலே,
எங்கள் அண்ணன் வீட்டிலே,
மஞ்சள் சரட்டிலே....
பொதை பொதைக்கிற செட்டியா ருக்குப்
பொறக்கற மாசம் கல்யாணம்;
மூணும் போதைக்கு முருகரே, சாட்சி;
குத்தடி விசாலாட்சி, கொண்டுவந்தாள் வீணு;
கஞ்சி காமாட்சி, மதுரை மீனுட்சி.

ஏழாங்கல் விளையாட்டு

(4)

காண்டேணிக் கூண்டு – மத்தேனி மதுரம்.

1. ஒண்ணேணி உலகம்.

2. ரெண்டேணி ரிஷபம்.

3. மூணு முத்தாச்சம் முத்தாச்சம்;
பேர்வழி செங்கல் பதிர்தி ரக்தம்,
பெண்ணுரே போட்டி ரத்தப்பட்டு டுத்தி
ரத்தம்போல் பாவாடை சாத்தி ரத்தம்.

4. நாலாங் கொல்லையிலே நாகப் பழம்பழுக்க
நாங்க ளெல்லாம் வாங்கித் திங்க
நடுக்கு ஜுரம் அடிக்க
எங்கம்மா என்னை வைய.

5. அஞ்சும் பஞ்சாங்கம்.

6. ஆறோ பாலாறு.

7. ஏழோ விளக்கெரிய,

8. எட்டும் கொட்டாரம்,

9. உத்தர மல்லாறு பத்தடியோ பாவி,
ரெத்து ரெறி நுளசி....
வில்லாரக் கொல்லை, வீரம்மன் சீரோடே,
காயம் கம்போடே, கத்தாரி முள்ளோடே,
அடுப்படிச்சா ரங்கம் ஆவுன்னே சிங்கம்,
கோவிலிலே லிங்கம், கும்பிடலாம் தங்கம்;
அடுப்புத் துடுப்பாச்சே, ஆயிரம் நாளாச்சே,
ஓரடுப்பே ஒஸ்தி, ஈரடுப்பே இந்த்ராணி,
மோக்ஷதரி மூணே.

(2)

1. ஈரிரத்னக் கோலு, எலைபறிக்கிற மாது,
மணத்தக் காளி வேரு.

2. ஈரிரண்டு மாத ருண்டு, மல்லிகைப்பூச் செண்டு;

3. ஈரிரிச்சானும் பண்டாரம்; எலையைப் போட்டானும் பண்டாரம்;
தண்ணி தெளிச்சானும் பண்டாரம்; நாலியைக் கட்டினான் பண்டாரம்;

4. ரெட்டைப் புள்ளைத் தாச்சி; குத்துவிளக்கு நீட்டி,
குழந்தைப் புள்ளைத் தாச்சி.

(4)

ஓராங்கட்டை ஏயபு சாயபு;
ரெண்டாங் கட்டை ரெத்னப் பேட்டை;
மூனாங் கட்டை முத்துப்பல் லாக்கு;
நாலாங் கட்டை நாரசிங்கம் பேட்டை;
அஞ்சாங் கட்டை பஞ்ச வர்ணம்;
ஆறாங் கட்டை ஆரோ சாரட்டு;
ஏழாங்கட்டை எழுதின தென்னோலை;
எட்டாங்கட்டை ஈரோட்டு மோளம்;
ஒன்பதாங் கட்டை ஓடும் தேரு;
பத்தாங் கட்டை பார்வதி பல்லாக்கு;
பதினோராம் கட்டை ஈசுவரன் பல்லாக்கு;
பன்னெண்டாம் கட்டை ராமர் பல்லாக்கு;
பதின்மூணும் கட்டை சீதை பல்லாக்கு;
பதிலானும் கட்டை கிருஷ்ணன் பல்லாக்கு.

(7)

கரண்டா மூடிக் கருவேலி,
கரண்டி சிப்பலிட்டு மூடாதே;
மூடி மூடித் தெறக்காதே;
முக்கணக் கையிலே காய்கொடுத்தேன்;
கள்ளா கள்ளா பத்திரம்;

## ஒரு புட்டான்

### (வேறு விளையாட்டு)

ஒரு புட்டான் திருபுட்டான்; ஓடிவா மங்களம்;
பன்னன் டானை....
செக்குத் திரும்பிய செவ்வந்தி மாலை;
மாடுங் கன்றும் வருகிற வேளை;
மஞ்சள் தண்ணி கரைக்கிற வேளை;
உன் அப்பன் பேர் என்ன? அவுத்திப்பூ.

## ஓடி விளையாடுதல்

காயா? பழமா? கத்திரிப் பிஞ்சா?
வந்தா வா; வராட்டிப் போ.

## கட்டிக் கொள்ளும் விளையாட்டு

[பெண்கள் பின்புறம் ஒருவரை ஒருவர் கட்டிக்கொண்டு
விளையாடும் விளையாட்டு.]
சாந்தே; ஏண்டீ?
சந்தனக் கட்டை எங்கே வச்சே?
அடுத்தாத்துப் பிரையிலே வச்சேன்
காணுமடி கரியாப் போறவளே,
இருக்கேடி எறிஞ்சு போன கட்டே.

## கட்டிய கையை வாங்கும் பாட்டு

இவ்வளவு வேணுமா பாகற்காய்?
அதுவும் வேண்டாம், பீர்க்கங்காய்;
இவ்வளவு வேண்டுமா பீர்க்காங் காய்?
அதுவும் வேண்டாம், கத்திரிக் காய்;

இவ்வளவு வேண்டுமா கத்திரிக்காய்?
அதுவும் வேண்டாம், வாழைக்காய்;
இவ்வளவு வேண்டுமா வாழைக்காய்?
அதுவும் வேண்டாம் முருங்கைக்காய்.

### கண்கட்டி விளையாடல்

ஊஞ்சாலி உம்மாலி,
உருமாலி ஆட்டோமே;
தோட்டத்திலே என்ன உண்டு, எதுஉண்டு?
கத்திரிக் காயும் உண்டு; கறியும் உண்டு;
தேடித் தேடி உண்ணுமல் விளையாடலாம்.

☆

என் உக்கை சந்தைக்குப் போச்சு;
என் உக்கை நெல்லுக்குத்தும்.

(2)

கட்டிலும் கட்டிலும் சேர்ந்ததோ?
காயாம் பூவும் பூத்ததோ?
வெட்டின கட்டையும் துளிர்த்ததோ?
வேரில்லாக் கத்திரி காய்ந்ததோ?
கண்ணை இறுகருங்கோ, இறுக்கினேன்.
ரோஜாப் பூவே, ரோஜாப் பூவே,
மெள்ள வந்து துள்ளிப்போ.

### கண்ணுமூச்சி

(1)

கண்ணு மூச்சி நேரேரோ,
காட்டு மூச்சி நேரேரோ,

மோட்டு மூச்சி நேரேரோ,
மொளகா மூச்சி நேரேரோ,
அழுகல் பழத்தைத் தின்னுப்பிட்டு
நல்ல பழத்தைக் கொண்டோடி வா.

(2)

உங்கள் அம்மா என்னென்ன போட்டாள்?
பாலும் சோறும் போட்டாள்;
ஈ விழுந்ததா? எறும்பு விழுந்ததா?
எறும்பு விழுந்தது;
எடுத்து விட்டுக் குடிச்சயா? சும்மா குடிச்சயா?
சும்மா குடிச்சேன்;
உனக்கொரு காயும் எனக்கொரு பழமும்
தேடிக் கொண்டுவா;
காயேவா, பழமேவா,
காஞ்சீ புரந்து நெல்லே வா.

கல்லாங்காய் விளையாட்டு

(1)

காண்டேனிக் கூண்டு, மத்து மாதளம்,
ஒண்ணு உலகம், ரெண்டு ரிஷபம்,
மூணு முத்தாச்சம், நாலு நந்தவனம்,
அஞ்சு பஞ்சாங்கம், ஆறு மனைக் காவல்;
ஏழு எண்ணெய் கொண்டா; எட்டும் பட்டாசு;
தொம்பல் தொலீசு, பத்தும் பாலோடி;
வில்லாதி வில்லா, வீரண்ணச் சூலா,
காரண்ணக் கம்பா, கற்சட்டி மாவா?
கொத் தோடே தெச்சுக்கோ.

(2)

காண்டேனிக் கூண்டு, மத்தேனி மதுரம்,
ஒண்ணேனி உலகம், ரெண்டேணி ரிஷபம்,
மூணு முத்தாச்சம் முத்தாச்சம்;
நாலாங் கொல்லையிலே நாகப் பழம்பழுக்க
நாங்களெல்லாம் வாங்கித் தின்ன
நடுக்கு ஜுரம் அடிக்க
எங்கம்மா என்னை வைய
அஞ்சு பஞ்சாங்கம், ஆறே பாலாறு;
ஏழோ விளக்கெரிய, எட்டுக் கொட்டாரம்;
உத்தம ரல்லாறு,
பத்தடியோ பாலி, ரெத்துரெறி துளசி
வில்லாரக் கொல்லை, வீரம்மன் கீரோடே
காயம் கப்போடே; கத்தாரி முன்னோடே;
அடுப்படிச் சாரங்கம், ஆவுன்னே சிங்கம்;
கோவிலிலே லிங்கம், ரும்பிடலாம் தங்கம்.

(3)

காண்டேனிக் கூண்டு, முத்தெளி மாலை,
வந்தெனி போல, ரெண்டணி ராமா,
முத்தணி முத்து, நாலணி நாகம்,
அஞ்சனி பஞ்சாங்கம், ஆரணி பட்டணம்,
ஏழு எழுத்தாணி, எட்டுக் கொட்டாரம்,
ஓம்பதெனி டொம்பச்சி கல்யாணம்;
பத்தெனி பாலு, பத்தும் வில்லு;
காதணிக் கம்பு; கச்சட்டி முள்ளு.

(4)

(ஜானகி)

ஏழைப் பொண் என்கிற ஜானகி,
எங்கள் பொண் என்கிற ஜானகி,

மாட்டுப் பொண் என்கிற ஜானகி — மகராஜி!
எட்டாண்டி, அவள் கெட்டாண்டி;
மண்ணுக் குள்ளே மறைஞ்சாண்டி;
மண்ணையும் சாம்பலையும் தின்னுண்டி;
ஓம்பா வக்மா எம்பாலக்கா, ஜடலாக்கா,
பந்திலே வந்து முடியாதே;
பாம்புக்குச் சட்டம் போடாதே.

(5)

ஓராங் கட்டை* ஓசந்தேன் அம்மா;
ரெண்டாங் கட்டை ரிஷப வாகனம்;
மூணாங் கட்டை முத்துராஜன் பேட்டை;
நாலாங் கட்டை நாகவல்லிக் கோட்டை;
அஞ்சாங் கட்டை பஞ்சாணி மெத்தை;
ஆறாங் கட்டை கூரைக்குச் சுள்ளு;
ஏழாங் கட்டை எழுதினபூச் சக்கரம்;
எட்டாங் கட்டை குட்டிச் சுவரு;
ஒன்பதாங் கட்டை ஒய சாய;
பத்தாங் கட்டை பார்வதி பல்லாக்கு,
பதினோராங் கட்டை பரமசிவன் பல்லாக்கு;
பன்னெண்டாங் கட்டை அஞ்சலத்தின் கட்டை.

(6)

குத்தொண்ணு, குழக்கட்டை ரெண்டு,
அப்பம் மூணு, அதிரசம் நாலு,
தின்னுண்டி, நெறிச்சாண்டி;
திண்ணையின் கீழே விடிச்சாண்டி;
குத்துக் குத்துப் பாப்பான்
குத்திக் கிண்டு சாகிறான்;

*(பி-ம்.) கொட்டை,

மேலாத்துப் பொண்களா,
விளையாட வாருங்கோ;
இந்தக் குத்து ஏதளம்பூ;
மாதுளம்பூ மல்லிகை மொட்டு

(7)

1. பொறுக்கி, சிறுக்கி,
போருளாம் தண்ணிக்கு;
தண்ணிக்குடம் தலைமேலே.

2. ஈரிரண்டு ஈரு வாழைத் தண்டு,
தண்டுக் கேத்த தண்டு,
தாமரைப்பூச் செண்டு.

3. மூணு மூணு,
மூணு பின்னல் ஆடிவர,
மூத்துக் கிருஷ்ணன் பாடிவரக்
காவேரி யம்மன் கலங்கி வருள்.

(8).

பொறுக்கி பொறுக்கி, போருளாம் தண்ணிக்கு;
தண்ணித் துறையிலே தவழ்ந்த மணலிலே. (1)

பிராமணன் பொண்டாட்டி பிள்ளைக்கு அழுவரு.
ஈரி ஈரி எடுத்துக்கோ, பூவைப் பறிச்சுக்கோ. (2)

கொண்டையிலே வச்சுக்கோ.
முக்கோட்டு சிக்கட்டு, மூணும் படிக்கட்டு. (3)

நான்கு டோங்குப் பம்பகம்;
நாங்களாடும் சிதம்பரம். (4)

அஞ்சு பிஞ்சு அவளோடே;
நெஞ்சு [நினையும் அவளோடே] (5)

கூறும் கூறும் சித்தப்பா,
கூழ்குடிக்கற பெரியப்பா! (6)

ஏழைக் கண்ணுட்டி தூது விளையாட்டு.
துலுக்கன் பொண்டாட்டி. (7)

நாரத்தம் பழமே, நான் வளர்த்த செல்லமே,
நான் செத்துப் போறைக்க நீ எங்கே இருப்பே? (8)

ஆத்தங் கரைஓரம் அழுது கொண்டிருப்பேன்.
சித்தாத்தாள் வருவாள்; சீதாப் பழம் குடுப்பாள்; (9)

பெரியாத்தாள் வருவாள்; பெரப்பம்பழம் தருவாள்;
கப்பல்காரன் வருவான்; கடனை ஒழிப்பான். (10)

உச்சம்மாள் லக்ஷ்மி, ஏனண்டை கந்தை காமா;
காமா, பீமா, மக்குத் தமா, சத்திய பாமா,
எருதாரே, எருதாரே, நமஸ்காரம்;
முகவி மூசட்டை, காவல் கால் சட்டை;
நாகம் பிளிக்கரா, கோகுல நமஸ்காரம்;
ஐதரி பசுமஞ்சள், கௌதரி பசுமஞ்சள்,
ஆரட்டு ஈரட்டு, கோரட்டுக் கச்சேரி;
ஏலோஜி பாலாஜி,
எண்டெண்டு தொண்டு பஜாரி;
ஒம்படைக் காரா, சொம்படைக் காரா,
பதிக்கல் லோட்டு, யவனச் சீட்டு,
சீட்மே லாட்டு, இடதுகைப் பூட்டு;
அம்மணி தும்மணி, அசலார் நெய் பெய்கை,
இங்கே பார் அப்பா திப்பண்ணு,
ஆதிசே ஷண்ணு, முத்துரா ஜன்னு;
தசரதுர் களுக்கே எண்ணெய் எண்ணெய்,
எண்ணெயோ ரெண்ணெய், சந்யாசீ ரெண்ணெய்;
மக்களுக் காகாது, மருந்தெண்ணெய்;
குந்தங் கூவி இண்டிகி ராவே.

மருகூ கோவி மைனுத் தூவி,
சிரஞ்சீவி சீதா தேவி,
காலுக் காந்த முலு, காவே ராந்த முலு,
சும்மே சிட்லக்கு, பொம்மை பத்ராணி,
விசாலாட்சி....
ஆகாய்க் கொட்லஞ்சு,
ஒத்தி ரெட்டையோடி, அஞ்சரை மாசமோடி?
புள்ளைக்குக் குழந்தையோடி, ராஜாராணி உள்.

## 10

ஒண்ணுங்கொட்டை, ஓட்டைச் சட்டி;
ரெண்டாங்கொட்டை, ரெத்னப்பல் வாக்கு;
மூணுங் கொட்டை முத்துப்பல் லாக்கு;
நாலாங் கொட்டை நாகவவ்லிப் பேட்டை;
அஞ்சாங் கொட்டை பஞ்சவர்ணப் பேட்டை,
ஆருங் கொட்டை அருக்கஞ் சட்டி;
ஏழாங் கொட்டை கருட வாகனம்;
எட்டாங் கொட்டை குட்டிச் சுவரு;
ஒன்பதாங் கொட்டை ஒட்டைப்பல் வாக்கு;
பத்தாங் கொட்டை பரங்கிப்பழம்.

## (11)

உன்னாலே என்ன குடவல்லித் தீர்த்தம்,
தீர்த்தக் குருவி திருமலை ஆழ்வார்;
மாதுளை அஞ்சு, மறுதணை ஆறு;
சோதனை ஏழு, கொளிக்காய் எட்டு;
நாரத்தை ஒன்பது, நல்லோர் பத்து;
இன்னிபதி னொண்ணு; கிடாரம்பன்னி ரெண்டு.

(12)

அடுப்புத் துடுப்பாச்சே!
ஆயிரம் நாளாச்சே!
ஓரடுப்பே ஓங்கி
ஈரடுப்பே இந்திராணி,
மோக்ஷதரி மூணே.

(13)

1. மைக் கூண்டிலே வாடி, மையடைச்சுத் தாரேன்;
கிளிக்கூண்டிலே வாடி, கிளியடைச் சுத்தாரேன்;
மையணி நிலாவும் திருநாளும்,
திருநாளுக் கேத்த அமராளும்,
அமராளுக் கேத்த அசுராளும்.

2. வாத்தியா ரம்மா காதிலே வைர ஓலை;
பாட்டியம்மா காதிலே பவழ ஓலை;
எங்கம்மா காதிலே தென்னோலை.

3. வெச்சேன் வெச்சேன் கிண்ணி;
வெண்ணாயிரம் கிண்ணி;
எடுத்து வச்சேன் கிண்ணி;
என்பேரிலே குத்தம் இல்லை;
அத்தட்டு இத்தட்டு மாமி மரத்தட்டு;
கண்ணாடித் தட்டுக் கைலாச நாதர்தட்டு.

4. கொட்டாங் கச்சி கூழாப்பை,
நட்டு வச்சேன்; பட்டுப் போச்சு;
எடுத்துத் தாடா கொசப் பயலே!
(இரண்டு கைக்கும் மாற்றி ஆடுதல்)
ஒன்று நல்ல புரியங் கன்று;
ரெண்டு ராம லிங்கம் சிண்டு;

மூணு முத்துலிங்கம் பாட்டு;
நாலு நாய்க்குட்டி வாலு;
அஞ்சு பஞ்சவர்ணக் குஞ்சு;
ஆறு அறுத்துவிட்ட வாலு;
ஏழு எழுத்தாணிக் கூறு;
எட்டு எட்டுக் காய்க் கட்டு;
ஒன்பது கொம் பேறி மூக்கு;
பத்துப் பயத்தங்காய் நெத்து.

## காய் எடுத்தல்

காப்பத்தேன் பத்தேன் கல்யாணி சாட்சி;
தரைப்பத்தேன் பத்தேன் தாயே நீ சாட்சி;
காப்பத்தேன் பத்தேன் காயே நீ சாட்சி;
தரைப் பத்தேன் பத்தேன் தாயே மீனாட்சி!

## கழல்கோடிப் பாட்டு

### (1)

1. ஓர் இராமன் போற தேசம்
என்னென்ன தேசம்? கல்லில்லாத் தேசம்;
கறடில்லாத் தேசம், முள்ளில்லாத் தேசம்;
முடக்குவெட்டி ராஜா.

2. ஈரிரண்டு, இலை சிறு தண்டு;
தண்டுக்குத் தண்டு; தாமரைப் பூச்செண்டு.

3. முச்சைமுனி பச்சரிசி;
மூவகம் கொண்ட பருப்பரிசி
தின்ன நல்ல தினையரிசி;

4. நாலை வைத்து இரண்டெடு;
நாரா யணன் பேரெடு;
அஞ்சவனே அம்புலி மான்;
பஞ்சவனே பரதேசி.

6. ஆறவளே, போறவளே;
அரும்பி நடந்தவளே;
திரும்பிப் பார்த்தால் திட்டிவிளை.

7. ஏழை எழுதிக்கோ;
எழுதின பூவைச் சூடிக்கோ;
வாடா மல்லியைச் சாத்திக்கோ;
வண் ணக் கழச்சிகொண் டாடிக்கோ.

8. எட்டாசி முட்டாசி, ஏகப் புரட்டாசி.

9. ஒன்பது குத்தி உலைபோட்டு,
சம்பாக் குத்தி சமைத் திறக்கு.

10. பத்துக்குச் சித்திரை பாலோட்டம்;
பப்ப நாப புரத்திலே தேரோட்டம்;
ஆடும் சித்திரை அம்மனுக்கு;
அன்னக் கழச்சியும் பொன்னுலே.

[இந்த விளையாட்டைச் சாதாரணமாக ஏழுவரையில் நிறுத்திக் கொள்வதே பெரும்பாலும் வழக்கம். அதனுல் இந்த ஆட்டத்திற்கு ஏழாங்கல்லென்று பெயர் சொல்வார்கள். உலாக்களில் பெதும்பைப் பருவத்தில் இந்த ஆட்டத்தைப் பெதும்பை ஆடுவதாக வருகிறது. அங்கே தலத்திற்கு ஏற்ற பொருள்கள் சொல்லப்படும்.

இந்தப்பாடலில் எதுகை மோனை எண்ணின் தொனி என்பவை முக்கியமானவை. எந்த நாட்டில் வழங்குகிறதோ அந்த நாட்டிற்குரிய சில செய்திகள் பாடலிடையே கலந்து வரும்.]

## (2)

கெட்டாண்டி அவன் கெட்டாண்டி;
மண்ணுக் குள்ளே மறைஞ்சாண்டி;
மண்ணையும் சாம்பலையும் தின்னுண்டி;
ஓம்பாலம்பா காசிவிம்பா,
சந்தனத் தாலிம்பா, சமைச்சுப் போட்டாத் திம்பா,

★

பார்வாசம் தங்கைக்குப் பாம்ப கடிச்சதாம்;
நாமத்தைச் சாத்தி நமஸ் கரிச்சா;
நாடாத் தாலி கட்ட நானும் வந்தேண்டி;
தப்பலம் மாங்கொட்டை, சன்னல் சம்பாக் கொட்டை;
ஒத்தக் கையன் கட்டை, உமையவரம் மொட்டை;
திந்திலிப்பிக் கட்டை, தீாத்த வாரி மொட்டை;
பூமா தேவிக் கட்டை, பூமிக்கிட்டுக்கோ;
சாயா தேவிக் கட்டை, சாகிச்சிட்டுக்கோ.

★

குத்தடி சாலாட்சி, கொட்டகொட்ட மீனாட்சி;
காசி விசாலாட்சி, மதுரை மீனாட்சி;
மாங்குடி ஆளம்மன்.

★

இந்தோடே ஜாடா,
குத்தோரம் கம்மாரம்,
கொழுக் கட்டைக்கு மாப்போடும்;
இந்தக் குத்து ஏதளங்காய்;
மாதளங்காய் மல்லிகை மொட்டு;
மல்லிகை மொட்டுப் பறிக்கப் போனேன்;
பாம்பு வந்து வெருட்ருத்து;
குத்தாண்டி குடைஞ்காண்டி;
கொடைஞ்ச மாம்பழம் தந்தாண்டி;
தின்னுண்டி, தெறிச்சாண்டி, திண்ணைக் கீழே விடிச்சாண்டி.

★

குத்து ஒண்ணு, குழக்கட்டை ரெண்டு;
அப்பம் மூணு, அதிரசம் நாலு;
மாட்டாங் கண்ணி மோராப்பை;
குண்டு சட்டி கொடமு ருட்டி;
வாங்கித் தாடா, வண்ணாரப் பயலே;
எடுத்துத் தாடா எடைப் பயலே;
கொண்டு தாடா கொசப் பயலே;
போடா பயலே, பூசாரிப் பயலே;
திருத லாம்பே ஒட்டக் காயே;
திருத லாம்பே ஏத்தச் சாலே,
காப்பத்தும் பத்தும் கமலாம்பா சாக்ஷி;
தரைப் பத்தும் தர்மாம்பா சாக்ஷி.

## (3)

1. மாம் பொறுக்கி மாதுளங்காய்,
தூப் பொறுக்கி தூதுளங்காய்,
கல்பொறுக்கி கடாரங்காய்.

2. ஈரி முத்தா ஏழுந்தா;
காட்டு முத்தா ஏழுத்தா, கடலோரம் புன்னை
பெத்தா.

3. மூக்கட்டிலே புள்ளைபெத்துக் கப்பலிலே தாலாட்டி.

4. நான்கே நடலம், பாம்பே படலம்;
நாங்களாடும் பம்பரம், சிவன் ஆடும் சிதம்பரம்.

5. ஐவர் அரைக்கும் மஞ்சள்; தேவர் குளிக்கும்
மஞ்சள்;

6. கூழு கூழு சித்தப்பா; கூழ் குடிக்கிற பெரியப்பா;
ஆக்கூரு மோளம்; ஆரணித் தாளம்.

7. ஏழும்பு தாழம்பூ, எரிகிற சட்டாம் பூ;
காட்டுக் களாப்பு;
அக்காடி அக்காடி, அக்கா ஆம்படையான்
வாருண்டி;
தெருவைப் பெருக்கடி; தென்னம் பாயை விரியடி;
கீழ்க்காணி மறுகாணி, கீழே அரைக் காணி;
கண்ணுள்ளே கறுப்பே; கறக்கறதைக்
குடிப்பேன்;
தேன்உள்ள ராஜா, செல்வக் குமாரா!

(4)

குத்து கொழக் கட்டை; கோணல் மாங்கொட்டை;
காட்டு மரவட்டை – கூட்டுக் கொழம்பிட்டேன்.

(5)

1. நாடுதாலி கட்ட நான் ஜயிச்சேன்;
தட்டிலி கட்டை தடை யோடே;
காச்சிக் கட்டை முதலோடே.

2. ஒத்தக்கை ஓசந்தேன் அம்மா!

3. குத்தே காமாக்ஷி, கொட்டஞ்சே மீனாக்ஷி;
கஞ்சி காமாக்ஷி, காகி விசாலாக்ஷி!

4. குத்தொண்ணு கொழக் கட்டை ரெண்டு,
அப்பம் மூணு; அதிரசம் நாலு.

5. தட்டொண்ணு; தாளம் ரெண்டு;
மோளம் மூணு; மூர்த்தி நாலு.

(6)

1. மாம் பொறுக்கி மாநுளங் காய்; தூப் பொறுக்கி தூதுளங்காய்;
கல்பொறுக்கி கடாரங்காய்.

2. ஈரிமுத்த எழுந்தா, காட்டு முத்தா, ஏழுத்தா;
கடலோரம் புள்ளை பெத்தா.

3. மூக்கட்டிலே புள்ளை பெத்து, கப்பலிலே தாலாட்டி.

4. நான்கே நடலம், பாம்பே படலம்;
நாங்கள் ஆடும் பம்பரம், சிவன் ஆடும் சிதம்பரம்.

5. ஐவர் அரைக்கும் மஞ்சள்; தேவாள் குளிக்கும் மஞ்சள்,

6. கூழு கூழு சித்தப்பா; கூழு குடிக்கிற பெரியப்பா;
ஆக்கூரு மோளம்; ஆரணி தாளம்.

7. ஏழும்பு தாழம்பூ, எரிகிற சட்டாம் பூ;
காட்டுக் களாப் பூ;
அக்காடி, அக்காடி, அக்கா ஆம்படையான் வாருண்டி;
தெருவைப் பெருக்கடி; தென்னம்பாயை விரியடி.

8. கீழ்க் காணி மறுகாணி கீழே அரைக்காணி;

கண்ணுள்ளே கறுப்பே, கறந்ததைக் குடிப்பேன்;]
தேன் உள்ள ராஜா! செல்வக் குமாரா!

9. தகதக தட்டு, தாமரை மொட்டு;
இந்திர வாணம், எலுமிக்சங் கொத்து;
என்னைப் பெத்த தாயாருக்குத் தங்கத்தாலே தட்டு;

10. பொதை போதே, பொன்னம் போதே,
வதை வேதே, வெக்கத் தாழை;
சுடச் சுடச் சுக்குத் தண்ணி;
மரமாரே மத்தாப்பு ரெண்டு;
சோளப் பொரி மூணு; சொக்கட்டான் நாலு;
புள்ளையார் அஞ்சு, சோழி ஆறு.

## கழக்கோடிப் பாட்டு

(7)

1. கட்டே வச்சு மரம் பொளந்தேன்.

2. ஈரிரண்டைப் போடடா; இறுக்கி மாட்டைக்
கட்டடா;
பருத்திக் கொட்டையை வையடா; பஞ்சணேசா.

3. முக்கட்டு வாணியன் செக்காடச்
செக்கும் செக்கும் சேர்ந்தாட,
வாணியன் வந்து, வழக்காட,
வாணிச்சி வந்து கூத்தாட.

4. நாலை வச்சு நாலெடு;
நாராயணன் பேரெடு;
பேர் எடுத்துப் பிச்சைஎடு.

5. ஐவரளிப் பசுமஞ்சள்;
அரைக்க அரைக்கப் பத்தாது;
பத்தற மஞ்சள் பசுமஞ்சள்.

6. ஆக்கு ருத்தாம் குழித்தலம்;
அடுப்புத் தண்டலம் தண்டலம்;
வேம்பு சுட்டால் வெண்கலம்,

7. ஏழு புத்திரச் சகாயம்
எங்கள் புத்திரச் சகாயம்,
மாட்டுப் புத்திரச் சகாயம்—மகராஜி.

8. எட்டும் பொட்டும் இடக்கண் பொட்டை;
வலக்கண் சப்பட்டை.

9. ஓய சித்திரத்தைப் பேரன் பொறந்தது;
பேரிட வாடி பெரியத்தை.

10. பத்திரா சித்திரா கோலாட்டம்;
பங்குனி மாசம் உத்தரம்;
ஆடி வெள்ளிக் கிழமை;
அம்மன் கொண்டாட்டம்.

11. நானும் வந்தேன் நடுக்கட்டைக்கு;
என்தோழி வந்தாய் எடுத்த கட்டைக்கு;
தட்டில் அப்பம் கொட்டைத்
தவலை சம்பாக் கொட்ட,
ஒத்தைக் கையால் கொட்ட,
ஓசந்த மரக் கட்டை;
குத்திக் குத்தித் தாரும்;
பொட்டலங் கட்டித் தாரும்.

(8)

முத்துக் கொழக்கட்டை; கோணல் மாங்கொட்டை,
காட்டு மரவட்டை; கூட்டுக் கொழம்பிட்டேன்.

(9)

1. குத்து குத்து பாப்பா,
வெட்டிக் கொண்டு சாகிறான்;
மேலாத்துப் பொண்களே,
வெளையாட வாருங்கோ.

2. எந்தக் குத்து ஏதலம்பூ?
யாதலம்பூ மல்லிகை மொட்டு.

3. குத்து ஒண்ணு, குழக்கட்டை ரெண்டு;
அப்பம் மூணு அதிரசம் நாலு.

4. குத்தினாண்டி; குடைஞ்சாண்டி
குடைஞ்ச மாம்பழத்தைத் தின்னாண்டி

5. தின்னாண்டி, திரிஞ்சண்டி,
திண்ணையின் கீழே விடிச்சாண்டி.

6. புகைக்கு அஞ்சு கட்டை
வச்சே வச்சே கண்ணி;
வண்ணாரக் கண்ணி;
எடுத்து வச்சேன் கண்ணி
என்மேல் குத்தம் இல்லை.

7. மைக்கண்டனே வாடி,
மைஇழைத்துத் தாரேன்;
கிளிக் குண்டனே வாடி,
கிளி அழைச்சுத் தாரேன்.

8. அஞ்சனத்துக்கு ரெண்டு கட்டை;
அஞ்சலமே நீதிரள அழகலமே,
அஞ்சுலு குஞ்சி வித்தாண்டார,
அம்பு பொரிக்கிற மாதவா;
காப்பொத்தேன் பொத்தேன்;
காயே நீ சாட்சி;
தரைபொத்தேன் பொத்தேன்;
தரையே நீ சாட்சி.

9. திருதலாம்பு கட்டை; இருபத்துநாலு முடிவு;
திருதலாம்பே தேசக் கூண்டே,
அத்தை அத்தையடி; அஞ்சாறு மாசமடி;
குஞ்சு குழந்தைகளெல்லாம் சுகமாய் இருக்குதடி.

## (10)

ஐவரளிப் பசுமஞ்சள்; அரைக்க அரைக்கப் பத்தாது;
அரைக்காத மஞ்சள் பசுமஞ்சள்
ஆக்குரு பக்ஷி தோப்பிலே,
அந்தர மான காட்டிலே;
சுந்தரம் போலே தேவடியா;
ஏழைப் பொண் ஜானகி;
எங்கள் பொண் ஜானகி;
மாட்டுப் பொண் ஜானகி;
மகராஜி.

## (11)

1. கட்டயோ ராமா, பட்டாபி ராமா.

2. சரியோ ராகவா, என்தம்பி கேசவா,
மாட்டை மறிச்சவா.

3. முக்கண்ண ராவணு, மோருக்கே போனீரோ?
ராவணு சீதையைக் கண்டீரோ?

4. நாலாம் வேதம்; வேதத்துப் புள்ளேக்கி
வெள்ளி அரணுச் சங்கிலி.

5. ஐயங் கொந்தடி சீதை; அரைப்படி நாணி,
நெல்லுக் குத்தடி நீலி,

6. ஆராளம்மன் காவேரி, போராளம்மன் காவேரி;
பொன்னுக் குடம் கொண்டு பூச்சொரிய.

7. ஏழை புத்ர சகாயம்; காரைக் காட்டிலே கல்யாணம்,
கட்டழகன் வீட்டிலே கொட்டு மோளம்.

8. எட்டா லிங்கத்து ஆனையாம்; எட்டுவருஷத்துச் சேனையாம்;
குட்டி போடாத குதிரையாம்.

9. ஓம்பா லிம்பா சந்தனத் தாலிம்ப;
சமச்சுப் போட்டாத் திம்பா;
பத்திலே வந்து புடுங்காதே;
பாம்புக்குச் சட்டம் போடாதே;
கூத்தியார் வீட்டுக்குப் போகாதே;
குட்டிப் பாம்பே!

(12)

1. நான்கு நடுத்தட்டு, சோலை மரத்தட்டு;
சொக்க வடித்தட்டு, ரிரிரி தூதூ!

2. இலைபறிக்கிற மாலு, மணத்தக்காளி வேரு;
பொறுக்கி அலமேலு ,போருளாம் தண்ணிக்கு.

3. தண்ணித் துறையிலே தவழ்ந்த மணலிலே*
பூமாதேவி அம்மா புள்ளைவரம் தாருளாம்.

4. தெற்குத் தெருவிலே, தேரோடும் வீதியிலே,
திசைமாறி நின்னுளாம்.

5. பாக்கு வச்சுப் பணமும் வச்சுப்
பள்ளிக் கூடத்திலே படிக்க வச்சுப்
படிக்காத தம்பிக்குப் பாடம் சொல்லி நாண்குடுத்தேன்;
கையிலே ஒத்தைக்காய்; கள்ளன் குடுத்தகாய்
கையிலே காயும்இல்லே; கள்ளன் குடுக்கவில்லே.

6. கீழ்க்கண்ணுடா வெள்ளாளா,
கீழைத் தெருவிலே,
சின்னண்ணன் பொண்சாதி
சிறுமிப் பொருமி அழுதாளாம்.

7 மேல்கண்ணுடா, வெள்ளாளா,
மேலத் தெருவிலே மேலண்ணன் பொன்சாதி
பெருமூச்சு விட்டாளாம்;
ஏலண்ணே, எங்கண்ணே, எழுத்தானி சடறண்ணே,
குத்து கொழக்கட்டை; கோனேரி மாங்கொட்டை;
எள்ளு விளைஞ்சால் கொள்ளு இல்லே;
குத்து ஒண்ணு; கொழக்கட்டை ரெண்டு;
அப்பம் மூணு; அதிரசம் நாலு;
நடுக்கட்டே வச்சேன்; திடுக்கிட்டாள் தோழி;
குட்டிச் சுவரே, கூழாங் கல்லே;
எனக்குஒரு ஆட்டந்தா.

---

*(பா—ம்) தவந்த மணையிலே.

## காய் ஆடல்

திரிதலாம்பு திரிச்சு விட்டேன்;
காலோரம் கையோரம்;
கட்டி வச்ச தாவாரம்;
திரித லாம்பே தேசக் கூண்டே;
அத்தை அத்தையடி, அஞ்சாறு மாசமோடி?
பெத்துப் பொழைச்ச யோடி?
புள்ளைக் குழந்தையடி;
சுகமா யிருக்கை யோடி?
சுகமாயிருக்கை யோடி?
சுகமா யிருக்கை யோடி?

## கண் கட்டு விளையாட்டு

தாறு பேறு, தந்தினப் பேறு — யார் மடக்கு?
(பெயர் சொல்ல வேண்டும்.)
லக்கல்லா தேனே தே,
அல்லம் பில்லம் அடிச்சுக்கோ; புடிச்சுக்கோ;
மூக்கிலே ரத்தம் வாரி அடிச்சிக்கோ;
லக்கல்லா ஒண்ணு.
(ஓடிப் போய் விளையாடுகிறது.)
காயா, பழமா, கத்திரிப் பிஞ்சா?
வந்தா வா வராட்டிப் போ.
(ஓடி விளையாடுகிறது.) சாட் பூட்த்ரீ.

[கையைக் கோத்துச்சட்டென்று விடுவித்துக் கையைச் சேர்த்துக் கொள்வது. யார் கை மாறி இருக்கிறதோ ஆள் அவுட்.]

## கில்லாப் பறண்டி

கில்லாப் பறண்டி கீப்பறண்டி,
மாப்பறண்டி; மல்லிகை மொட்டு;
உங்கப்பன் தலையிலே என்ன மூச்சி?
முறுக்கு முச்சி.

முறுக்கு மூச்சி புடிச்சவளே,
மூன்ருப் பழம் தின்னவளே,
காக்காப் பழம் தின்னவளே,
கையை வச்சுக் காலை மடக்கு.
மாட்டேன்;

மாட்டேன்ரு வல்லேன்ரு வல்லயத்தைச் சொல்லேன்ரு.
நாரும் தாரும் வாழைக்காய்; தாளம் போலே கோபுரம்;
கருருப் பிரம்மா மண்டபம்; சீதாதேவி, பூமாதேவி;
கையை வங்சுக் காலை மடக்கு.
கைஎங்கே? காக்காய் கொண்டு போச்சு.
காக்காய் எங்கே? புளிய மரத்திலே உட்கார்ந்திருக்கு.
புளிய மரம் எங்கே? வெட்டி யாச்சு.
வெட்டின கட்டை எங்கே? அடுப் பெரிச் சாச்சு.
அடுப் பெரிச்ச சாம்பல் எங்கே? பல் தேச்சுட்டோம்.
பல்தேச்ச சாம்பல் எங்கே?பல் தேச்சுட்டுப் போயிட்டா.
பல்தேச்ச குளம் எங்கே? புல்முளைச்சுப் போச்சு,
புல் எங்கே? ஆனையும் குதிரையும் தின்னுடுத்து.
ஆனைஎங்கே? அரமனை வாசலில் கட்டியிருக்கு.
மானத்தைப்பார்; மலிவாடறது;
கால்வந்துடுத்து; கைவந்துடுத்து.

(2)

கில்லாப் பறண்டி, கீப்பறண்டி,
மாப்பறண்டி, மல்லிகை மொட்டு;
உங்கப்பன் தலையிலே என்ன மூச்சி?
முறுக்கு மூச்சி.
முறுக்கு மூச்சி புடிச்சவளே,
மூன்று வாழைம்பழம் தின்னவளே,
உங்கப்பன் தலையில் என்ன மூச்சி?
கையை வச்சுக் காலை மடக்கு.

தாறு தாறு வாழைக்காய்;
தாளம் போலே கோபுரம்;
கையை வச்சுக் காலைமடக்கு.

## கும்மி

(1)

கும்மி அடிக்கிற பெண்டுகளா,
கூட்டமும் பாட்டமும் ஏதுக்கடி?
மீசை முளைக்காத வெறும் பயல்கள்;
வேடிக்கை பார்க்கிறார் பாருங்கள்;
செங்காங் கல்லாலே வீடு கட்டிச்
சேவகப் பையனை வீடழிச்சு,
மீசை முளையாத வெறும்பயல்கள்
வேடிக்கை பார்க்கிறார் பாருங்கடி.
வாராராம் துரை வாராராம்;
மதுரைப் பட்டாள வீதியிலே;
ருப்பி சாராயம், கொண்டை கரைப்பணம்
வச்சுச் சலாம் பண்ணி வாராராம்.

(2)

தந்தானக் கொம்மி தானனக் கொம்மி;
அன்னதா னத்துக்குச் சின்னக் கொம்மி.

(3)

திண்ணையைத் திண்ணையைப் பாருங்கடி;
தெருவுத் திண்ணையைப் பாருங்கடி;
நம்ம ஊரு மணியக்காரு,
தெருவுத் திண்ணையைப் பாருங்கடி.

★

சின்னக் கெணத்திலே தண்ணிமொண்டு — நீங்கள்
சிங்காரத் தோப்பிலே வேட்டையாடி,
வீட்டுக்குப் போன அண்ணிஅம்மா
பொன்னியம் மாதண்ணி கொண்டாடி.

★

பட்டுப் பாவாடை கட்டிக் கிட்டுப்
பட்டணத் தெருவு போகும் போது,
அங்கிருக்கற மொட்டைப் பசங்க
பட்டுப் பாவாடைக்கு ஆசைப்பட்டார்.

★

உருட்டுக் கட்டட மெத்தையிலே
உள்ளே சிங்கார மேடையிலே
ஐயா அலங்கி நித்திரை போக
அரட்டிக் கும்மியைப் பாருங்கடி.

பாக்கு மரத்திலே சோருக்கிப்
பன்னீர்ச் சொம்பிலே நெய்வார்த்துத்
தேக்கு வெளியிலே சோறு போட்டுத்
தேங்க நிற்கற எங்கண்ணு!

★

என்னைப் பெத்த என்தாயே,
எத்தனை தேசம் சுத்தி வந்தோம்?
பக்க மலிஞ்சுது அம்மாவே,
நாட்டுக் கும்மி அடியுங்கடி.*

★

இரும்பிலே பட்ட குண்டு,
என்னை வித்தாலே மாய; குண்டு;
சூர்ணி போலத் தொப்பைக் கணபதி,
எப்ப வருவாரோ கச்சேரிக்கு?
உடம்பு வடமாக் கொட்டாங்கச்சி – நீங்க
உட்கார்ந்து பேசுங்க இங்கிலீசு;
தெலுங்கு பேசச் தெரியாதா?
தாசர் வீட்டுக்குப் போகச் சொல்லு.

★

வெள்ளி மலையிலே வௌக் கேத்தி
வெங்கலச் சொம்பிலே பால்பொங்கிக்
கள்ளுக் குடிக்கிற அண்ணன் மாருக்குக்
கண்ட இடமெல்லாம் கூத்தியாரு.

---

*(பா – ம்.) போடுங்கடி.

(4)

கொக்கா லங்கா, குருவிலங்கா,
ரங்காஸோப் — ராணிப் பேட்டை;
முத்தா போலே முருங்க ஸோப்;
சலசலாப் பொடி வாசனைப் பொடி, தாசனேனே.

★

ரெண்டுசுத் தாங்கண்ட வேப்பமரம்;
தோப்படியிலே மண்வீடுகள்;
மணிப் பிரம்பு, பச்சரிசி;
ஆக்கிப் படையுங்கடி; — நம்ம
வீரனுக்கு இங்கே பிஸ்கேபு செய்யுங்கடி.

(5)

ஒருகட்டு மெத்தை மேலே நாங்க இருப்போம்;
ஒரு கட்டுத் தாழம்பூ நாங்க முடிப் போம்;
வாதாடிச் சூதாடிப் பந்தாடுவோம்;
வாங்களடி, கன்னிமாரே, கும்மி அடிப்போம்.

★

காணுங் கொளுத்தியான் கருவாட்டுக்கு
    ரெண்டுபக்கம் கண்ணு;
பக்கத்து வீட்டிலே சோக்கான பொண்ணு;
    எங்க மாமனுக்கு அது மேலே கண்ணு.

★

ஆத்தோரம் கெணறு வெட்டி,
    அவளை நம்பிக் கவலை கட்டிக்

கவலைமாடு ரெண்டும் - தங்கமே;
கடைவாய்பல் ரெண்டும் போச்சே.

★

குருவி இருந்த மலைமேலே, குருடன் கவி பாடையிலே,
அருகில் இருந்த தோழனைப்போய் ஆத்திலே தள்ளி
விட்டேன்.

★

ஏண்டா கிழவா, எளச்சே குதிர் போலே?

★

## குழுக்கு விளையாட்டு

[இந்த விளையாட்டுக்கு எட்டுப் பேர்; ஆறு பேரைச் சுற்றி நிறுத்தி விட்டு, உள்ளே ஒருத்தியும் வெளியே ஒருத்தியும் நின்று கொள்வார்கள். உள்ளே இருக்கிறவள்களும் வெளியே இருக்கிறவரும் கையைக் கோத்துக் கொண்டு பாடுவார்கள்.]

உளுந்து உளுந்து செட்டியாரே,
உளுத்தம் பருப்பாரே,
பாலோடே நெய்யோடே
ப்ச்சைக் கிளியோடே,
கோவிந்த ராஜா,
குமுக்கு ராஜா, குமுக்கு.

இவ்வாறு பாடி ஒவ்வொருத்தி தலைமேலும் கைவைத்துக் கொண்டு வருவார்கள். யார் தலைமேலே வைக்கும் போது குமுக்கு என்று முடிகிறதோ அவளை அமுக்கி உட்கார வைப்பார்கள். இப்படியே ஆறு பேரையும் உட்கார வைத்து விட்டு, வெளியே இருக்கிறவள் எண்ணெய் விற்பாள்.

உள்ளே இருக்கிறவள் இரண்டு தடவை முழுகி விட்டு வருவாள். இரண்டு தடவையும், "குட்டிகளா! மேலேபடாதேயுங்க" என்று சொல்வாள். ஆனால் குட்டிகள் பட்டு விடும்! மூன்றுந் தடவை பாடுவதில்லை. அதறகு உள்ளே இருக்கிறவள் எண்ணெய் விற்கிறவளைக் கூப்பிட்டுக் குழந்தைகளுக்கு எண்ணெய் தேய்க்கச் சொல்வாள். அப்புறம் வெளியே இருக்கிறவள் அரைப்பு விற்பாள். குழந்தைகளுக்கு அரைப்புத் தேய்க்கச் சொல்வாள், உள்ளே இறுக்கிறவள். அப்புறம் மஞ்சள். பிறகு தண்ணீர் கொண்டு வருவாள், வெளியே இருக்கிறவள். அப்புறம் வெந்நீர். உள்ளே இருக்கிறவள், குழந்தைகளுக்கு வெந்நீர் முழுக்கிடச் சொல்வாள்; அதன் பிறகு வெளியே இருக்கிறவள் முறையே கிழிந்த துணி, நல்ல துணி; ஒடிந்த வளை, நல்ல வளை இவைகளையெல்லாம் விற்பாள். நல்லவற்றையெல்லாம் குழந்தைகளுக்குப் போடச் சொல்வாள், உள்ளே இருக்கிறவள். பிறகு சாம்பாடு, ஏழுகிண்ணம் வைத்துச் சாப்பாடு போடுமுன், "சாதம் போட மாட்டேன்" என்று சொல்லி ஓடுவாள். எல்லோரும் அவளைத் தேடிப் பிடித்துக் கொண்டுவந்து சாதம் போடச் சொல்வார்கள், பிறகு,"நெய் குத்த மாட்டேன்" என்று சொல்லி, இதே மாதிரி மோருக்கும் சொல்வார்கள். உடனே பிடித்து வருவார்கள். அதன் பிறகு கணுக்காலிலிருந்து உச்சந் தலைவரை அளவு காட்டி,

"இந்த முட்டும் பணந்தாரேன்
விடுடா துலுக்கா!"

என்பாள்.

"விடமாட்டேன் துலுக்கா!"

என்று மற்றப் பெண்கள் கூச்சல் போடுவார்கள்.

"பாலுஞ் சாதம் தரேன்; விடுடா துலுக்கா"

என்பாள். உடனே எல்லாரும் விட்டு விடுவார்கள். பிறகு ஓடிப் பிடித்தல். அவ்வளவோடு விளையாட்டு முடியும்.

## குழந்தை கால் ஆடுகிறது

உந்துந்து காலாடு கிருஷ்ணா நீ,
மத்தந்தக் காலாடு; மன்னரு துரையே,
உந்துந்து காலாடு கிருஷ்ணா.

## கழாங்கல்பாட்டு

### (1)

அக்காடி அக்காடி அக்காம்படையான் வாராண்டி;
எந்தத் தெருவிலே? உள்ளந் தெருவிலே;
வாங்கப் பணமில்லே; வாசக் கொட்டை வெத்தலே;
ரெட்டை ரெட்டை ராமாஞ்சி ரெட்டை;
கோழிக் கால் சட்டை;
முக்கோடு தக்கோடு பாலைக்காய்
முள்இல் லாத ஏலக் காய்
நான்கே நடந்துவர
பாம்பே படர்ந்துவர
ஐவர் அரைக்கும் மஞ்சள்;
தேவர்கள் குளிக்கும் மஞ்சள்;
தோரண வாழை; தேரடிச் சேலே;
ஏழைப் பெண் எங்கள் பெண்
மாட்டுப் பெண் என்கிற ஜானகி மகராஜி.
பொறையாஞ் செட்டி, பொட்டிக் குள்ளே வச்சுக்கோ;
பொறையாஞ் செட்டி, பொட்டிக் குள்ளே வச்சுக்கோ.

### (2)

[பெண் குழந்தைகளை வட்டமாகக் கைகளைக் கோத்துக் கொண்டு நிற்க வைத்து, அந்த வட்டத்தின் உட்புறத்தில் ஒருத்தியும் வெளிப்புறத்தில் ஒருத்தியுமாகத் தாங்கள் ஒரு

கையைக் கோத்துக் கொண்டு, யாராவது ஒரு பெண்ணின் தலையை அழுக்க, அவள் உட்காருவாள். அப்படி அழுக்கும் போது பாடும் பாட்டு இது.]

பாலாடை பாலாடை பச்சைக் கிளியாரே,
பாலை வச்சேன் தண்ணிக்குப் போனேன்;
குழுக்கு ராஜா குழுக்கு!
உளுந்து உளுந்து செட்டியாரே,
உளுத்தம் பருப் பாரே,
பச்சைக் கிளியாரே,
பாலை வச்சேன், தண்ணிக்குப் போனேன்;
குழுக்கு ராஜா குழுக்கு.

(வேறுபாடம்)

உளுந்து உளுந்துச் செட்டியாரே,
உளுத்தம் பருப்பாரே,
பாலோடை பாலோடை
பச்சைக் கிளியாரே,
குண்டு மணித் தாயாரே,
குழுக்கு ராஜா குழுக்கு.

(2)

1. ஆலைப் பொறுக்கி, ஆசாரக் கள்ளி,
தூக்கம் தெளிந்த தூவாடைக் காரி,
பாக்கு மரத்துக்குப் பாவாடைக் காரி.

2. வீரி இரண்டெடுக்க, வீசந் தண்டெடுக்க,
மாதர் மண்ணெடுக்க.

3. முக்கோட்டு ராவணன், முத்துச் சரவணன்.

4. நான்கு நடந்து வர. நாகேந்திரன் தொடர்ந்துவர,

5. ஐவர் அரைக்கும்மஞ்சள்,தேவர் குளிக்கும் தண்ணீர்

6. ஆக்கோ ரனிவாழை-அண்ணன் தம்பி பெருவாழை.

7. ஏழண்ணன் காட்டிலே, எங்கணண்ணன் வீட்டிலே
மஞ்சள் சரட்டிலே....
பொதை பொதை பொம்பரம், செட்டி சிதம்பரம்,
கொக்கு கோலாட்டம்....

## (3)

ஓராங் கட்டை ருசந்த மரக் கட்டை
ரெண்டாங் கட்டை ரிஷப வாகனம்
மூணாங் கட்டை முத்தரசன் பேட்டை
நாலாங் கட்டை நாரவில்லி கோட்டை
அஞ்சாங் கட்டை பஞ்சனை மெத்தை
ஆறுங்கட்டை கூறே குச்சல்லி
ஏழாங் கட்டை எழுதின பூந்தேர்
எட்டாங் கட்டை வெட்டும் குதிரை
ஒன்பதாங் கட்டை ஓலைப்பூ சாயப்பூ
பத்தாங் கட்டை பார்வதி பல்லாக்கு
பதினோராங் கட்டை என் கட்டை
பன்னிரண்டாங்ட்டை ஸ்வாமி கட்டை.

## கை கொட்டுதல்

கொட்டடி கொட்டடி சின்னப் பொண்ணே,
கோல வளைக் கையாலே;
சேர்ந்துக் கொட்டடி சின்னப் பொண்ணே,
சிகப்பு வளைக் கையாலே;

---

(பி - ம்.) உற்றூர் தாழ.

பார்த்துக் கொட்டடி சின்னப் பொண்ணே,
பச்சை வளைக் கையாலே;
நீயும் கொட்டடி சின்னப் பொண்ணே,
நீலவளைக் கையாலே;
தானே கொட்டடி சின்னப் பொண்ணே,
தங்கவளைக் கையாலே.

### கை தட்டி விளையாடல்

அப்பிச்சி தட்டிந்தி சின்னம்மா;
அந்திரிக்கும் பெட்டிந்தி சின்னம்மா;
தானும் தின்னிந்தி சின்னம்மா;
தம்பிடிக்கு இச்சிந்தி சின்னம்மா;
அத்தை அடிகிந்தே லேது.
[இது தெலுங்கும் தமிழும் கலந்த பாட்டு.]

### கையில் அறையும் விளையாட்டு

காது குடையுது குடையுது;
பனமட்டை வேகுது வேகுது (அடிக்கிறது.)
பாம்பு ரங்கம் பள்ளி ரங்கம்;
தேரு ரங்கம் சடார் ரங்கம்.

*

கொட்டை பராந்து கண்ணைக் குத்த
வருகுது வருகுது.

### கையில் குத்தி விளையாடுதல்

அம்மா குத்து, திம்மா குத்து,
பாட்டி குத்து, பேரன் குத்து,
பிள்ளையார் குத்து, பிடிச்சுக்கோ.
(கையைப் பிடித்துக் கொள்வது.)

## கையை மடக்கல்

முறுக்கு மூச்சி தின்னவளே,
சீதாதேவி, பூமாதேவி, கையைமடக்கு.
கை எங்கே? காக்கா கொண்டு போச்சு.
காக்கா எங்கே? மரத்து மேலே.
மரம் எங்கே? வெட்டிப் போட்டாச்சு.
வெட்டின கட்டை எங்கே? அடுப் பெரிச்சாச்சு.
அடுப்பெரிச்ச சாம்பல் எங்கே? பல்தேச்சாச்சு.
பல்தேச்ச இடம் எங்கே?* பில்லு முளைச்சுப் போச்சு,
பில் எங்கே? ஆனையும் குதிரையும் தின்னுடுத்து.
ஆனைஎங்கே? அரண்மனை வாசலிலே.
குதிரைஎங்கே? கோட்டை வாசலிலே.
கைவந்துடுத்து, கைவந்துடுத்து.

## கொட்டடி

கொட்டடி, கொட்டடி, தையல் முத்து;
குனிஞ்சு கொட்டடி, தையல்முத்து;
நெருஞ்சி முள்ளாம், நாவடமாம்;
நாவட சக்கர கோபுரமாம்;
கோபு ரத்திலே படியளக்க,
மாமஞரு கோட்டைகட்ட,
சிய்யாழி மோளம்வரச்
சிதம் பரத்துத் தாலி வர.

---

* (பி-ம்.) தலம்எங்கே.

## கொடு

[இது கில்லாப் பறன்டியைப் போன்றதொரு விளையாட்டில் பாடுவது. குழந்தைகளை உட்கார வைத்துக் கைகளைக் கீழே பரப்பி வைக்கச் சொல்லி அவர்கள் விரல்களை ஒவ்வொன்ருக வரிசையாய்த் தொட்டுச் சொல்வது இது.]

ஒருபுட்டாம் திருபுட்டாம், ஓடியா மங்களம்;
பருப்பா கோயில் பன்னிரண்டானை;
செக்குத் திரும்பிச் செவ்வந்தி மாலை;
மாடும் கன்னும் வார வேளை;
மஞ்சத் தன்னி கரைக்கிற வேளை;*
பூவாம் பூவாம் பட்டணமாம்;
புதுச்சேரியாம் பட்டணமாம்;
நண்டு சுட்ட கரையிலே
குண்டு மணி கூத்தாடுது;
குறத்தியம்மா கைஎடு.

## கேலி விளையாட்டு

[குழியை எண்ணுவது.]

ஒக்கு கெடுத்தான் சுக்குடு - ரெட்டைப்பல் லேரி;
மூக்கிலே சுளுக்கு- நாக்கிலே தந்தம்;
ஐயப்ப சோலை - அறுமுகத் தகடி;
எழுசாண் மீசை - எட்டச்சுக் கோட்டை;
கும்பகர்ணு - சம்பா மாலை,
சலங்கை ராஜா - சந்தைக்குப் போனுன்.

---

உன் அப்பன் பேர் என்ன? அவுத்திப்பூ.

## சண்டை அபிநயம்

[பெண்கள் எல்லோரும் இரண்டு கட்சிகளாகப் பிரிந்து சண்டைக்குப் போவதுபோல, ஒருகட்சி முன்வந்தால், மற்றொரு கட்சி பின்போகும்.]

முதல் கட்சி ஓட்டுமேலே ஏறுவோம்;
2-ஆம்கட்சி: ஈட்டியாலே குத்துவோம்;
1-ஆம்கட்சி: பல்லை வலிக்குதே;
2-ஆம்கட்சி: நெல்லைக் கொறிச்சுக்கோ;
1-ஆம்கட்சி: பாக்கு வெட்டியைக் காணுமே;
2-ஆம்கட்சி: தேடிப் புடிச்சுக்கோ.

## சுற்றி விளையாடல்

[நான்கு மூலைகளிலும் நின்று சுற்றி விளையாடல்.]
காயோ கடப்பங்காய்;
காஞ்சீ புரத்து நெல்லிக்காய்;
உப்போ புணியங்காய்
ஊறுகாய் போட்டாய் நெல்லிக்காய்.

## தட்டாமாலை

தட்டாமாலை தாமரைப்பூ; சுத்திச் சுத்திச்சுண்ணும்பு.

## அட்டலங்காய்

தாடுத்தாடுத் தாம்பாளம்-தடுக்கு மேலே கோபுரம்;
சிங்கப் பெருமாள் பட்டணம் - சீதாதேவி கால் நீட்டு;
மாட்டேன்.
மாட்டேன்று வல்லேன்று
மஞ்சளைப் பூசிக் குறத்தியம்மா கால்நீட்டு.

---

(பி-ம்) உப்பே ஊறுகாய் ஊறப் போட்ட நெல்லிக்காய்.

## தும்பி விளையாடுதல் (மத்தாடுதல்)

ஈச்சங் கொத்து, இளங்கொத்து;
இடையன் எப்படிப் பொண் குடுப்பான்?
பாக்கூடு நாளையிலே பரியம் போட்டான்
வெள்ளைக்காரன்.

## தொடை தொட்டு விளையாடல்

ஒருபுட்டம் திருபுட்டம்,
ஓடிவா மங்களம்;
பருப்பாஞ் சோறும்;
பன்னிரண்டு வகையாம்;
செக்கைத் திருப்பிச்
செவ்வெண்ணெய் வார்த்து,
மாடும் கன்னும் வரும்போது
மஞ்சத் தண்ணி குளிக்கும் போது
காலை மடக்கடி காமாட்சி.

## துரோபதை பந்தடி

1. இத்தரை தன்னிலே அத்திநா புரத்துக்கு
இறைவர் ஐவருடை தேவியராம்;
எங்கும் புகழ்பெறும் துருபதன் யாகத்தில்
உதித்த தேவியராம்;
உத்தமர் பணியும் ஆதிமூலப்பொருள்
சித்தத்துக் குகந்த தேவியராம்;
உருவில் சிறந்த, அறிவில் மிகுந்த
திருவவதார மங்கையராம்;
புத்தியில் லாத்திரி யோதனன் சேனையைப்
போர்க்களத்தில் மடிச்சவளாம்;

புகழுடன் அவன் மார்பி லிருந்து
பொருந்தக் கூந்தல் முடிச்சவளாம்;
உத்தமி யாகிய துரோபதை யம்மனின்
சித்திரப் பந்தடி பாடவே
அத்திமுகக் கண பதியே, உன்இரு
அடிமலரைத் தந்தாளுவாய்.

2. சித்திரப் பதுமை போலவே துரோபதை
வெற்றியு டன்பந்தை அடிக்கவே,
தேவலோ கத்துள்ள தேவ ஸ்திரீகளும்
சிறக்கப் பந்தெடுத் தெறியவே,
உத்தமி கையினுல் அடிக்கும் பந்தது
உயரக் கிளம்பிப் பரியவே,
சத்திய பாமையும் ருக்மிணி யும்அதைக்
தடுத்தெ டுத்ததை எறியவே,
கத்தைக் குழலது அவிழ்ந்து சரிந்து
கனத்த மார்பில் புரளவே,
காம்பரிந் திட்ட மலர் அரும்புகள்
கசங்கி எங்கிலும் சிதறவே,
வச்சு முடிச் சிட்ட தலைஜோடிப் பெல்லாம்
வாகில்லாமல் கலையவே,
மன்னன் துருபத ராஜன் மகளும்
மகிழ்ந்தொருபந் தடிச்சாளாம்.

3. முத்து முத்தாய் வேர்வை நெத்தியிலிருந்து
முகத்தின் வழியாய் ஒழுகவே,
முன்னை எழுதிய கண்ணின்மைத் திலகம்
முத்தும் கரைஞ்சு வழியவே,
ரந்தினக் கம்மல் ஜிமிக்கி முருகோடு
சித்திரக் கோசுமுன் ஜொலிக்கவே;
முத்துமூக் குத்தியும் நத்துப்புல் லாக்குடன்
மூனுலோ கம்விலை மதிக்கவே,

முல்லை அரும்பையும் முத்தையும் பழிச்ச
பல்லின் ஒளிபள பளக்கவே,
முருக்க மலரும் பவழக் கோவையும்
பழிக்கும் அதரம் துடிக்கவே,
தொல்லுலகத்தவர் அல்லல் வினைகளைத்
தொலைக்கும் பார்வை உருக்கவே,
சுந்தரி யாகிய துரோபதை யம்மன்
தூக்கி ரெண்டுபந் தடிச்சாளாம்.

4. வாரிட்ட கொங்கையின் மேலிட்ட ரவிக்கை
வாருவா ராயக்கிழிஞ் சோடவே,
வள்ளிக் கொடியையும் மின்னலையும் ஒத்த
நல்லிடை சிற்றிடை துவளவே,
சீருள்ள இழைக்குச் செழுகம் விலைபெறும்
சிறந்த பாவாடை நெகிழவே,
சேர்த்திருக்கிய ஒட்டியா ணம்மது
திருகு தெறித்து விழுகவே,
பூரித்த மார்பினில் இட்டமே லாக்கும்
பூமியில் விழுந்து புரளவே,
போட் டிருந்த பூவரும்பு மாலை
பொலபொலவென் றுதிரவே,
கூரிட்ட வேல்விழி மாதர்கள் எதிரே
நேரிட்ட பந்தெடுத் தெறியவே,
கொம்பனையாள துரோபதை யம்மன்
அன்புடன் மூணுபந் தடிச்சாளாம்.

5. கழுத்தில் அட்டிகை சரடு முடனே
காசுமாலை தோளில் புரளவே,
கண்டசரம்சரப் பளிமுத்து மாலை
காசினியை விலை மதிக்கவே,
திருத்த முடனே கடைந்த சங்கதைப்
பழிக்கும் கழுத்து வளையவே,

செழிச்சு வளரும் பச்சைமூங் கில்ஒத்த
திருத்தோள் இரண்டும் அசையவே,
கரத்தில் அணிந்த தோடா கங்கணம்
கைவளைகல கல்க்கவே,
காரணி யின்பத்து விரயில் மோதிரம்
கழன்று பூமியில் உதிரவே,
பெருத்த புவியில் ஐயக்கொடி யிட்ட
புண்ணியர்க்கு மாலை இட்டவள்,
புகழ்பெரியவள் துரோபதை அம்மன்
பொருந்த நாலுபந் தடிச்சாளாம்.

6. பாத சரம் தண்டை பாதத்துக் கொலுசு
பசும்பொற் சிலம்பு ஒலிக்கவே,
பத்து விரலும் காலாழி பீலி
பயிலடிகளும் தெறிக்கவே,
மாதரில் சிறந்த அருந்ததி கூட
மங்கையர் கற்புக் கிணையாகுமா?
மலரயனுடனே மனைவிகள்கிட்டே
வகைக் குறையிடப் போதுமா?
தீதற்ற யாக சேனையின் பந்தடி
சிறக்கப் பாடிடும் நேசனே,
திருமருந்துவக் குடிதனில் உறை
சிறுவன் கோடியாம் தாசனே,
பூதலந் தன்னி லவர்க்குறு வினையைப்
போக்கடிக் கும்சிங் காரியாம்;
புண்ணிய மேஉரு ஆகிய துரோபதை
பொருந்த அஞ்சுபந் தடிச்சாளாம்.

## தோட்ட விளையாட்டு

புங்கம்இலை புளியம்இலை எங்கிருக்குது?
பொன்னப்பன் தோட்டத்திலே மிகுந்திருக்குது.

அப்ப வாரேன்; அவ்விடத்தில் பூச்சி இருக்குது;
பூச்சிக்கு என்கையில் மருந்தி ருக்குது;
கட்டாரிச் சேலே மேலே கண்இருக்குது;
மாமனுக்கும் எனக்கும் ஒரு வம்பிருக்குது.

## நாலுகாய் விளையாட்டு

தட்டுத் தாம்பரம் மொட்டுப்போலே;
தயிர் கடைஞ்ச வெண்ணெய் போலே;
குத்தே சாலாட்சி, குடகுட மீனாட்சி,
கஞ்சி காமாட்சி, காசி விசாலாட்சி,
கங்கேபா கீரதி, யமுனே, சரஸ்வதி,
உமக் கொரு குத்து;
குத்து குத்து பார்ப்பான்,
குத்திக் கொண்டு சாகிறான்;
மேலாத்துப் பொண்களா,
விளையாட வாருங்கோ;
குத்தோரம், செம்போரம்,
குழக்கட் டைக்கு மாப்போரும்;
குத்து ஒண்ணு, குழக்கட்டை ரெண்டு,
அப்பம் மூணு, அதிரசம் நாலு,
அத்தட்டு இத்தட்டு, மாமி தட்டு மரத்தட்டு;
கண்ணாடிப் பொட்டு, கமலப் பூத்தட்டு;
கஸ்தூரிப் பொட்டு.

## பந்தடிப் பாட்டு

(1)

1. ஒத்தா, ரெட்டா, முத்தா, குப்பூ,
மஞ்சள், மாடம், குஞ்சு, கூடம்,
பந்துகள் ஆயிரம் பார்த்தேன்.

2. ஒத்தே சாத்தி- ஓமம் பண்ணி,
ரெட்டே சாத்தி - ரேக்கம் பண்ணி,
முக்கால் குந்தி — முக்கலக் குந்தி,
நக்கா தீர்த்தம் - நெல்லு விளைய,
ஐயோ? மையோ? — கண்ணுக்கு மையோ?
ஆறு காரு, - சிச்சிலிக் காரு;
இரும்பெழுத் தாணி - வெங்கலெழுத் தாணி;
எட்டும் எட்டாது — கிருஷ்ணன் சேலை;
கொட்டி மடிச்சுக் கொடியிலே போட்டுக்
கோலாட்டக் கொம்பே, மாலாட்ட வா.

3. பந்தே பந்தே, - இங்கே வாரும்;
பாப்பாரச் சட்டம் — பசுமஞ்சள் காளை;
காளம் காளம் — பன்னீர்க் காளரம்;
நாமம் குழலுக்கு - நாமம் சாத்திக்
கட்டிச் சுருட்டின — வெத்தலைக் காம்பு;
கையிலே ஆயிரம் — மடியில் வச்சு,
மாஇடிச்சு — வெல்லம் போட்டு,
ருசி பார்த்துப் பாகு வச்சு,
பணியாரம் புடிச்சுப் பந்தியிலே வரிசை வச்சு,
ஆட்டம் ஒம்பதுக்கும் நாட்டம் பத்துக்கும்
பத்தே மும்பழம்.

4. ஒத்தா - ரெட்டா - முத்து - குப்பு,
மஞ்சள் - மாடம் - குஞ்சு - கூடம்,
நன்னி - பொன்னி - நவரை - பொன்னன்;
உப்பந்தி ராவணன் - பந்து - பதினாயிரம்;
பாக்கு மரமும் பவழமல்லியும் பார்த்தேன்.

5. சீப்பு ஒன்றே - காப்பு ரெண்டே;
சீப்பு மூணே - காப்பு நாலே;

சீப்பு அஞ்சே, காப்புமாறே,
சீப்பு ஏழே - காப்பு எட்டே,
சீப்பு ஒம்பது - காப்புப் பத்து. (ஒத்தா)

6, ஊசால் ஒண்ணு; தூசால் ரெண்டு;
ஊசால் மூணு - ஒழுக்கால் நாலு,
ஊசால் அஞ்சு; தூசால் ஆறு; ஊசால் ஏழு;
தூசால் எட்டு,
ஊசால் ஒன்பது; தூசால் பத்து. (ஒத்தா)

7. டேக்கால் ஒண்ணு; பாக்கால் ரெண்டு;
டேக்கால் மூணு; இளையாள் நாலு;
டேக்கால் அஞ்சு - பாக்கால் ஆறு,
டேக்கால் ஏழு; பாக்கால் எட்டு;
டேக்கால் ஒன்பது; இளையாள் பத்து. (ஒத்தா)

8. முச்சன் ஒண்ணே; முனியன் ரெண்டே,
முச்சன்மூணு; தச்சன் நாலு;
முச்சன் அஞ்சு; தச்சன் ஆறு,
முச்சன்ஏழு; முனியன் எட்டு;
முச்சன் ஒன்பது; தச்சன் பத்து. (ஒத்தா)

9. நாங்க ஒண்ணே; நட்டம் ரெண்டு;
நாங்க மூணு; சுட்டன் நாலு;
நாங்கள் அஞ்சு; நாட்டன் ஆறு;
நாங்கள் ஏழு; சுட்டன் எட்டு;
நாங்கள் ஒன்பது; நட்டன் பத்து. (ஒத்தா)

10. ஐயாள் ஒண்ணு; செய்யாள் ரெண்டு;
ஐயாள் மூணு; செய்யான் நாலு;
ஐயாள் அஞ்சு; அரசியாள் ஆறு;
ஐயாள்ஏழு; செய்யாள் எட்டு;
ஐயாள் ஒன்பது; அரசியாள் பத்து. (ஒத்தா)

11. அகங்கையும் புறங்கையும் ஒண்ணே;
அழும்புள்ளைத் தாய்ச்சியும் ரெண்டே;
புக்ககம் போறது மூணே;
பொறந்தகம் போறது நாலே;
செத்துப் பொழச்சதும் அஞ்சே,
சீராட்டினதும் ஆறே;
அகங்கையும் புறங்கையும் ஏழே;
அழும்புள்ளைத் தாச்சியும் எட்டே;
புக்ககம் போறது ஒன்பதே;
பொறந்தகம் போறது பத்தே, (ஒத்தா)

12. ஆனையடி ஒண்ணு; பூனையடி ரெண்டு;
ஆனையடி மூணு; பூனையடி நாலு;
ஆனையடி அஞ்சு; பூனையடி ஆறு;
ஆனையடிஏழு; பூனையடி எட்டு;
ஆனையடி ஒன்பது; பூனையடி பத்து. (ஒத்தா)

13. கீரைப்பாத்தி ஒண்ணு; கிறுக்கல் பாத்தி ரெண்டு;
கீரைப் பாத்தி மூணு; கிறுக்கல் பாத்தி நாலு;
கீரைப் பாத்தி அஞ்சு; கிறுக்கல் பாத்தி ஆறு;
கீரைப் பாத்தி ஏழு; கிறுக்கல் பாத்தி எட்டு;
கீரைப் பாத்தி ஒன்பது; கிறுக்கல் பாத்தி பத்து
(ஒத்தா)

14. தத்தங்கித்தாளம் ஒண்ணு;
டமார மோளம் ரெண்டு;
தத்தங்கித் தாளம் மூணு;
திருப்பதி மோளம் நாலு;
தத்தங்கித் தாளம் அஞ்சு; டமார மோளம் ஆறு;
தத்தங்கித் தாளம் ஏழு; திருப்பதி மோளம் எட்டு;
தத்தங்கித் தாளம் ஒன்பது; டமார மோளம் பத்து.
(ஒத்தா)

15. காப்புக் கொலுசு ஒண்ணு; கடிகாரவளை ரெண்டு;
காப்புக் கொலுசு மூணு; கங்கணவளை நாலு;
காப்புக் கொலுசு அஞ்சு; கடிகாரவளை ஆறு;
காப்புக் கொலுசு ஏழு; கங்கணவளை எட்டு;
காப்புக் கொலுசு ஒன்பது; கடிகாரவளை பத்து.
(ஒத்தா)

16. பாஜிப்பந்து ஒண்ணு; வைரப் பந்து ரெண்டு;
பாஜிப்பந்து மூணு; வைரப் பந்து நாலு;
பாஜிப்பந்து அஞ்சு, வைரப்பந்து ஆறு;
பாஜிப்பந்து ஏழு; வஜ்ரப் பந்து எட்டு;
பாஜிப்பந்து ஒன்பது; வைரப் பந்து பத்து.
(ஒத்தா)

பந்தடி

(2)

சோளாச் சோளாக் காட்டிலே,
சோளம் அடிக்கிற வீட்டிலே,
பந்தடியடி மீனுவே,
பதக்குச் சோளம் நான்தாரேன்.

(3)

ஓரடி ரெண்டடி;
மாணிக்கம் முத்தடி;
ஜிமிக்கி சித்தாடை;
பாப்பாரத் தெருவிலே
பாப்பாத்திக்குக் கல்யாணம்.

## பலிஞ்சடுகுடு

### (1)

[மூச்சுவிடாமல் சொல்லிக்கொண்டே விளையாடுவது.]
கவானைக் கவட்டி, கவட்டி. கவட்டி
பரிஞ் சடுகுடு.

★

பலிஞ் சடுகுடு அடிப்பானேன்?
பல்லு ரெண்டும் போவானேன்?
ஓங்கப்பனுக்கும் ஓங்காயிக்கும்
ரெண்டுபணம் தண்டம், தண்டம், தண்டம்.

★

தூதூ நாய்க் குட்டி;
தொட்டி யத்து நாய்க்குட்டி;
வளைச்சுப் போட்ட நாய்க்குட்டி;
இழுத்துப் போட்ட நாய்க்குட்டி;
நாய்க் குட்டி, நாய்க்குட்டி, நாய்க்குட்டி.

கிக்கீக்குங் கம்பந் தட்டை;
காசுக்கு ரெண்டு தட்டை;
கருணைக் கிழங்கடா;
வாங்கிப் போடடா.
வாங்கிப் போடடா.

★

பலிஞ் சடுகுடு அடிக்கவே,
பல்லு ரெண்டும் பதறவே.

★

கல்லினாலே கோட்டை கட்டி
இழுத்தடிச்சான் நவாபு.

## பலிஞ்சடுகுடு

### (கல்)

குடுகுடு வானக்கல்; கொம்புத்* தேனக்கல்;
சுக்குச் சுண்ணாம்புக்கல்; சொர்ண சோதிக்கல்;
வாகட கோகட வைதாளக்கல்;
வைதாள்க்கல், வைதாளக்கல்.

### (2)

கல்லினாலே கோட்டை கட்டி
இழுத்தடிச்சான், நவாபு, நவாபு.

### (3)

### (வாழைப்பழம்)

கருணைக் கிழங்கடா; வாழைப் பழமடா;
தோலை உரியடா; தொண்டைக்குள் அடையடா;
அடையடா, அடையடா, அடையடா, அடையடா!

### (4)

அந்தக் குடுக்கை, இந்தக் குடுக்கை;
கல்லிலே போட்டால் சுரைக்குடுக்கை;
சுரைக்குடுக்கை சுரைக்குடுக்கை சுரைக்குடுக்கை....

அந்த அரிசி இந்த அரிசி;

---

* கும்பம் தேனக்கல்.

நேத்துக் குத்தின கம்பரிசி;
கம்பரிசி கம்பரிசி கம்பரிசி...

★

கருணைக் கிழங்கடா; வாழைப் படமடா;
தோலைஉரியடா; தொண்டைக்குள் அடையடா;
அடையடா அடையடா அடையடா அடையடா...

★

அடடா கிழவா நரிகறடேறுதடா;
ஒன்பது நரியிலே ஒருநரி கெழநரி
கெழநரி முதுகிலே அரைப்படி நரைமயிர்;
அரைப்படி நரைமயிர் அரைப்படி நரைமயிர்....
அந்த அஞ்சு இந்த அஞ்சு;
பழைய செருப்புப் பதினஞ்சு;
பதினஞ்சு பதினஞ்சு பதினஞ்சு பதினஞ்சு....

★

குடுகுடு வானக்கல், கொம்புத் தேனக்கல்*
சுக்குச் சுண்ணும்புக்கல்; சொர்ண சோதிக்கல்,
வாகட, கோகட வைதாளக்கல்
வைதாளக்கல் வைதாளக்கல் வைதாளக்கல்....

★

கீச்சுக் கீச்சடா; கீரைத் தண்டடா;
நட்டு வச்சேண்டா; பட்டுப்போச்சடா;
பட்டுப்போச்சடா, பட்டுப்போச்சடா, பட்டுப்போச்சடா

★

---

(பா-ம்) கும்பும் தேனக்கா...

கொத்துக் கொத்து ஈச்சங்கா; கோடாலி ஈச்சங்கா;
மதுரைக்குப் போனாலும் வாடாத (மதுரமான) ஈச்சங்கா
ஈச்சங்கா, ஈச்சங்கா, ஈச்சங்கா, ஈச்சங்கா....

(5)

ஈர்க்கு ஈர்க்குள்ள கம்பந்தட்டை;
இந்திர வானில் கம்பந்தட்டை;
மொட்டை வளைச்சுக் கட்டு,
முட்டாப் பயலே, முட்டாப் பயலே!

★

பட்டாப் பட்டா ராவணா,
பறங்கிப் பட்டா ராவணா,
நெத்தியிலே குண்டு போட்டுச்
சுட்டாண்டா ராவணா!

(6)

கீச்சுக் கீச்சடா; கீரைத் தண்டடா;
நட்டு வச்சேண்டா; பட்டுப்போச்சேடா.

★

குளத்தூரு மெத்தை மேலே
கொள்ளுக்காய் பறிக்கப்போனேன்;
வள்ளுவத் துலுக்கப் பையன்
வளைச்சுக் கிட்டான்;
திமிறிக் கொண்டேன்; புடிச்சுக்கொண்டான்;
நான் - திமிறிக்கொண்டேன்;
நான் - திமிறிக்கொண்டேன்....

★

வருகுது, வருகுது, கொடிசுத்தி வருகுது;
கொம்பு சுத்தி வருகுது; கோலம் போட்டு வருகுது;
இரும்புச்சங் கிலிபோட்டு
இந்திரவிமான வாசலிலே தடுத்தாலும்
தடையிலாமே வருகுது மழை.

பறங்கி வந்தான்; தமுக்கடிச்சான்;
பன்னென்டு கப்பலை ஓட்டிவிட்டான்;
இரும்பினுலே கோட்டைகட்டி
இழுத்தடிச்சான் நவாபு, நவாபு, நவாபு....

(7)

தோத்த கட்டு ஜயிக்க ஜயிக்கக்
தோலுச் சப்பரம் கட்டக் கட்ட
நான்தாண்டா ஒங்கப்பன்;
நரைச்ச கெழவன் செவத்தராயன்;
செம்புலிப் புடுக்கன் செம்புலிப் புடுக்கன்....

★

செத்தவனுக்குப் பாடைகட்டக்
கோலும் இல்லையடா – பல
குச்சியும் இல்லையடா – பல
கோலும் இல்லையடா, கோலும் இல்லையடா....

★

ஆனை ஆனையடா; அறுபது ஆனையடா,
வாவறுத் தேண்டா, கூறு போட்டேண்டா,
கூறுபோட்டேன்டா, கூறு போட்டேண்டா....

★

பந்து பந்தடா, புளியம் பந்தடா,
நின்று தாக்கடா; உயிரைப் போக்கடா;
உயிரைப் போக்கடா; உயிரைப்போக்கடா....

(8)

முத்து முத்துச் சேலைக்காரி, முப்பணத்து ஓலைக்காரி,
தண்டை கொலுசுக்காரி, தாவார வீட்டுக்காரி;
அவளைத் தொடுவானேன்? கவலைப் படுவானேன்?
ஒப்பனுக்கும் ஓயாளுக்கும் ஒருபணம் தண்டம்,
தண்டம் தண்டம் தண்டம்....

(9)

பறையன் வந்தாண்டி; தமுக்கடிச் சாண்டி;
இரும்பிறலே கோட்டை கட்டி இழுத்தடிச்சான்
நவாபு நவாபு நவாபு....

☆

ஜடுகுடு மலையிலே ரெண்டானை ரெண்டானை;
தவறி விழுந்தது கிழட்டானை, கிழட்டானை.

★

வெள்ளிப் பிரம்பெடுத்து மெள்ளச் சுத்திவிட்டு
வீதி வலம்வந்தே விளையாட வாரேண்டா;
வாரேண்டா, வாரேண்டா....

+

தங்கப் பிரம்பெடுத்துச் சிங்காரமாய் வீசிக்கொண்டு
தாவிகட்ட வாரேண்டா வாரேண்டா.

+

கவானைக் கவட்டி இலுப்பைச் சவட்டி,
இந்திரன் கோட்டை, மயானசாலை,
பருப்புத் தண்டம் சீதாராம் சீதாராம்!

+

(10)

பலிஞ்சடார் அடிக்கவே;
பல்லுரெண்டும் பதறவே,
பதறவே பதறவே....

(11)

பந்து பந்தடா, புளியம் பந்தடா,
நின்னு தாக்கடா; உயிரைப் போக்கடா;
போக்கடா, போக்கடா, போக்கடா, போக்கடா....

+++

மதகேறி மான்வந்து நிக்குது
கட்டடா, புடியடா; கள்ளக் கயிறு போடடா;
போடடா, போடடா, போடடா, போடட.....

(12)

பட்டாம் பட்டாம் பறங்கிப் பட்டாம்;
பன்னண்டு கப்பல் ஏத்தி வச்சான்;
இருப்பினலே கோட்டை கட்டி,
இழுத்தடிச்சான் நவாபு
நவாபு நவாபு நவாபு நவாபு....

+++

சடுகுடு மலையிலே ரெண்டானை
தவறி விழுந்தது கிழட்டானை
கெழட்டானை, கெழட்டானை, கெழட்டானை, கெழட்டானை

(13)

பட்டா, பட்டா, ராவணா,
பறங்கிப் பட்டா, ராவணா,
நெந்தியிலே குண்டு போட்டுச்
சுட்டாண்டா, ராவணா!

(15)

பலிஞ் சடுகுடு அடிப்பானேன்?
பல்லு ரெண்டும் போவானேன்?
ஒங்கப்பனுக்கும் ஒங்காயிக்கும்
ரெண்டு பணம் தண்டம் தண்டம் தண்டம்....

## பள்ளிக் கூடப் பிள்ளையின் விளையாட்டு

குளத்துக்குப் போனேன்; நண்டு கடிச்சுது;
வூட்டுக்குப் போனேன்; செருப்படி பட்டேன்;
பள்ளிக் கூடத்துக்குப் போனேன்; பெரம்படி பட்டேன்;
ஒண்ணுக்குக் கேட்டேன்; வூட்டுக்கு ஓடியாந்துட்டேன்.

## பின்ஞல் கைவத்து விளையாடல்

[கையில் காயை வைத்து வைத்திருப்போரைக் கண்டு பிடிக்கச் சொல்லுதல்.]

சப்பட்டை சலவடையாம்,
சதுரம்மன் கோவிலிலே;
மணியா மணிமினுக்கக்
கையிலே காயும் இல்லே.

[காயைக் கேட்டல்.]

மாமி மஞ்கள் தா;
மருதாணிக் கொம்பைத்தா;
மாவி மங்கலத்தான்,
கொப்பைக் கண்டெடுத்தாள்.

## புஷ்பச் செண்டு விளையாடல்

தாங்கச் சரமாலே; சண்பகப் பூமாலே;
ஆண்டி தோட்டந் தன்னிலே, ஆய்ந்த மல்லி மாலே.

## பேப்பந்து விளையாட்டு

பேபே, என்ன பே?
பந்துப்பே; என்ன பந்து?
ரப்பர்ப் பந்து; என்ன ரப்பர்?
இந்தியா ரப்பர்; என்ன இந்தியா?
வடஇந்தியா; என்ன வடை?
ஆமவடை; என்ன ஆமை?
குளத்து ஆமை; என்ன குளம்?

திரி குளம்; என்ன திரி?
விளக்குத்திரி; என்ன விளக்கு?
குத்து விளக்கு; என்ன குத்து?
திம்மாக் குத்து,

## பொம்மைக் கல்யாணம்

பொம்மைக்குக் கல்யாணம் புரியவே வேணும்;
கம்மல் ஜிமிக்குக் கைக்குப்பொன் மாட்டில்
செம்மைப்பட்டாடை, சிவப்புச் சித்தாடை,
அம்மணி வாங்கி அருளடி எனக்கே.

## மத்தாட்டப் பாட்டு

சோளாச் சோளாக் காட்டிலே
ளேள மடிக்கிற வீட்டிலே
பந்தடியடி மீனுளே,
பதக்குச் சோளம் நான்தரேன்;
சின்னச் சின்ன மூக்குத்தி,
சின்னப்ப னிட்ட மூக்குத்தி,
அத்தை யிட்ட மூக்குத்தி,
அகத்து
அத்தை யிட்ட மூக்குத்தி.
(அஞ்சு)
அரைப் பணத்து மூக்குத்தி,
(கலியாண வாசலிலே)
சீமந்த வாசலிலே,
தேடிஎடுத்த மூக்குத்தி (பா. பூ)
கண்டெடுத்த மூக்குத்தி;
காப்பணத்து மூக்குத்தி.

[மத்தாடும் போது குழந்தைகள் செல்லி ஆடுவது.]

## மாதுகுத்துதல்

மாது மாது, மன்னவன் தம்பியைக்
கோது கோது கொல்லத்து வெத்தலே;
வெள்ளிக் கரண்டகம்; சொல்லிக் கொடாதே;
தாயைக் குடு; தம்மைக் குடு;
உற்ருரைப் பெற்ருரை ஊரைக்குடு;
குடுகுடு நாதா, குளவிய நாதா,
கொட்டையில் லாப்பழம் என்னபழம்?
வாழைப்பழம்.
வாழைப் பழத்துக்குத் தோலேக்கடி;
வட்டில் கஞ்சிக்கு வாயைப் பிள;
பிள பிள பிள.

## மார்பில் தட்டிக் கொண்டு ஓடி விளையாடுதல்

முன்னே போளா மீனுட்சி,
சின்ன வீட்டுக்கு விளக்கேத் தினையா?
கையில் குழந்தை இருக்குது;
குழந்தையைக் கீழே விட்டுவிட்டு,
ஒருகை கூழைக் குடிச்சுவிட்டு,
வாயில் பச்சரிசி போட்டுக்கொண்டு
மார்பில் தட்டிக்கொண்டு வா.
என்ன குளத்தில் முருகினே?
பீக்குளத்தில் முழுகினேன்;
எங்கள் வீடு எல்லாம்
பீயாய் விட்டது;
ஓடு ஓடு.

## முழங்காலில் ஏற்றி விளையாடுதல்

தென்ன மரத்திலேஏஒதே; தேங் காயைப் பறிக்காதே;
பனமரத்திலே ஏருதே;.பனங்காயைப் பறிக்காதே;
ஆற்றிலே விழறயா? குளத்திலே விழறயா?

## விரலாட்டம்

சின்னச் சின்னக்கை,
சிங்காரக்கை,
ஓமக்கை, ஒன்பது கை,
பத்துக்கை.

## விளையாட்டு

சாட் பூட் த்ரீ.

[கையைக் கோத்துச் சட்டென்று விடுவித்துக் கையைச் சேர்த்துக் கொள்வது. யார் கை மாறுயிருக்கிறதோ; அவன் அவுட்.]

வரகு அரைக் கிததும் ஆம்பான் வந்து நிற்கிறதும்
அக்கான் குத்துறதும் அது சோறு கொதிக்கிறதும்
வெல்லப்பம் தட்டறதும் ரெண்டுபேர்
மல்லுக்கு நிற்கறதும்
வாடி வாடி என்கிறதும்
வரமாட்டேன் என்கிறதும்
பிள்ளை அழுகிறதும் பேசாதே எங்கறதும்.

# உணவு வகை

பலவகை உண்ணும் பண்டங்களைப் பற்றிய பாடல்கள்

கிழவன் மனைவி:

சோளச் சோறு தின்ன மாட்டேன்;
சொன்னபடி கேட்க மாட்டேன்;
நரைச்ச கிழவன் கிட்டே
நான் இருந்து வாழ மாட்டேன்.

சாரயாம்
பலிஞ்சடுகுடு

வேப்பம் பட்டை வேலம், பட்டை,
வேத்தெடுத்த சாராயம்,
காத்திருந்து பூசை கொள்ளும்
காவேரி பண்டாரம், பண்டாரம்....

## காபிப் பாட்டு

காபி என்ன, மெத்த சுகம்
கண்டோம் என்பாள் வெகுபேர்கள்;
அழகு தருவ தென்பார்; அநுதினமும் காபி என்பார்;
தொந்தி விழுந்ததென்பார்; துரைபோல ஆனதென்பார்
சுறுசுறுசுறுப்புத் தருவதென்பார்; சொல்லுவது நிஜந்தானோ?
புத்திஉண்டாகும் என்பார்; பொய்யோ மெய்யேதானே
என்பார்;
பல்லும் துலக்கிடாமல் பறந்திடுவார் காபிக்கடை;
இட்டிலி ரவாதோசை எனக்குக் கொண்டா முன்னே.
சொஜ்ஜியும் லாடுமாகச் சுருக்காக வேணுமென்பார்;
உப்புமா, ஓமப்பொடி, ஒருதுண்டு அல்வா என்பார்;
தயிர்வடை, பக்கவடாம், அடியம்மா, ஜல்தியிலே வேணும்.

என்பார்
சேர்என்பார் கப்என்பார்; தங்கமே, சிலபேர் டம்ளர்
என்பார்;
கூச்சல் போட்டுக் கூப்பிடுவார் — தங்கமே,
கோபமாகக் கொண்டுவா என்பார்;
கதைகள் பேசிச் சாப்பிடுவார்; – தங்கமே,
கடையிலேயும் சாப்பிடுவார்; - தங்கமே,
கையிலும் வாங்கிப் போவார்;
பெண்டுகளுக்குத் தந்திடுவார், தங்கமே,
பிரியமாகப் பேசிடுவார்;
காபிஎன்ன கசக்குதென்பார்; தங்கமே,
கர்நாடகப் பெண்கள்சிலர், — தங்கமே,
டிகாக்ஷன் ஜாஸ்தி என்பார் - தங்கமே,
தித்திப்புக் குதைச்சல் என்பார்; – தங்கமே,
அருமையான காபி என்பார் தங்கமே.
இந்தக் காபி, இந்தமணம்
எங்கேயும் பார்த்ததில்லை;
காபி பலத்தினாலே கால்நடையும் கசப்பாச்சு,
நடையென்றால் அலுத்துப் போச்சு;
நாகரிகக் காபி யாலே;
ஜென்மமும் மாறிப் பேயச்சு, சீரழிஞ்ச காபியாலே;
விரதங்கள் கெட்டதடி விருப்பமுள்ள காபியாலே;
அமாவாசை இல்லையடி, ஆனந்தக் காபியாலே;
சிராத்தங்கள் கெட்டதடி, சீரழிஞ்ச காபியாலே;
எந்தஊர் போனாலும் இந்தக்காபி இல்லைஎன்பார்;
ஒருநாள் காபியில்லை; உடம்பெரிச்சல் கண்டதென்பார்;
தலைவலி வந்ததென்பார்; தடுமாறும் புத்திஎன்பார்;
அத்தனையும் நம்பவில்லை; அந்தச்சுகம் கண்டதில்லை;
காபிக் குடியினாலே தங்கமே தங்கம்,
தங்கக்காசு போகுதடி, தங்கமே தங்கம்,

ஊர்ஊராய்ச் சுத்திப் பார்த்தேன் தங்கமே தங்கம்,
ஓட்டலுக்குக் குறைச்சல் இல்லே, தங்கமே தங்கம்.

4. அறியாத பாலரெல்லாம், - தங்கமே, தங்கம்,
ஆணுவச்ச காபியாலே – தங்கமே தங்கம்,
அத்தனையும் செலவழிச்சார் – தங்கமே, தங்கம்.

## லட்டுப் பாட்டு

காசா லட்டு, கைமேலே துட்டு,
போனால் வராது; பொழுது போனால் நிக்காது.

★

மண்ணடி விற்கும் லட்டு;
வாங்கி மடியில் கட்டு;
எடுத்துக் கொஞ்சம் புட்டு,
எனக்கே முன்னே இட்டு,
உண்டுவிடு ஏப்பம்;
ஓடுகொஞ்சம் பாப்பம்.

## கம்பஞ் சோறு

கம்பஞ் சோறு, கைவிட்டுப் பார்த்தேன்;
நல்ல சோறு, வாடா மச்சான், சாப்பிடலாம்;
வல்லேபோ; – கொல்லேப்போ;
குருவிச் சூத்திலே கொப்புளம்;
நான் - சூத்திப்பிட்டேன் - நீ;
நக்கிப்பிட்டே.

### விருந்து

ஆம வடையும் அதிரசமும்
அப்பளம் போலே அவலும் பொரியும்
கட்டுக் கரும்பும் கரும்பு (ம்) நெவியும்
கற்பூர வெத்தலே கமுகம் பழுப்பும்
பச்சைக் கிராம்பும் முத்துச் சுண்ணும்பும்
வங்காள தேசத்துச் சோங்காளா சோம்பும்
வாங்கியே வந்தால் பாங்கியே வாறேன்,
ஜலேலோ, ஜலலோ!

### கறி

அம்மா வண்டியிலே; ரோஜாப்பூக் கொண்டையிலே;
வெத்தலே பாக்கு வாயிலே; லவங்கப் பொட்டி கையிலே
அருப்புமேலே சட்டியைப்பார்; சட்டிக்குள்ளே
கறியைப்பார்;
கறியிலே கொஞ்சம் டேஸ்ட் பார்.

### கறிச்சுவை

ஆரம்மா வண்டியிலே? ரோஜாப்பூக் கொண்டையிலே;
வெத்தலே பாக்கு வாயிலே; லவங்கப் பொட்டி கையிலே
அடுப்பு மேலே சட்டியைப்பார்; சட்டிக்குள்ளே
கறியைப்பார்;
கறியிலே கொஞ்சம் டேஸ்ட்பார்.

### அரிசிக் கஷ்டம்

[யாழ்ப்பாணத்தில் வழங்குவது]

ஆறு மூறுக் கடையிலே;
அரிசி விக்கற விலேயிலே;

பொண்டுகள் படுகிற பாட்டிலே
போலீ சுக்காரன் வரவரையிலே.

## சோறு தின்னலாம்

வெள்ளரிக்காய்த் தோட்டத்திலே
விளையாடப் போகையிலே
வட்டிலிலே சோறுபோட்டு
வாரி வாரித் தின்னலாம்;
கத்திரிக்காய்த் தோட்டத்திலே,
களைபுடுங்கப் போகையிலே,
கிண்ணியிலே சோறு போட்டுக்
கீறிக் கீறித் தின்னலாம்.

## அரிசி

புச்சரிசி பாதாளம் பார்த்து
வாடா, என்மகனே,
கிச்சரிசி கீர்வாளம்
கேளுடா, என்மகனே!

## விருந்து வருணனே

வாழைக் காயி, வறுதலங்காய், பூஷனிக் காயும் பொரிச்ச
மாங்காயும்,
கத்திரிக் காயும் கருணைக்கிழங்கும் கடலை சேர்ந்த
புடலங்காயும்,
வறுவெண்டைக்காய், பொரிசுண்டைக் காயும்,
பாங்காய்ச் சமைச்ச பாகற் பச்சடி, அவரைக் காயும்
துவரம் பருப்பும்,
அக்கா குடுத்த கொக்காக் கீரையும், அழகாய்ச்

சமைச்சாள் அருகில் வச்சாள்;
பலகால் சமைச்சாள்; பசியைத் தீர்த்தாள்;
ஆஓ தனனே, தன்னனே!

★

ஆம வடையும் அதிரசமும் அப்பளம் போலே அவலும் பொரியும்
கட்டுக் கரும்பும் கரும்பு நெலியும், கற்பூர வெத்தலை கமுகம் பழுப்பும்,
பச்சைக் கிராம்பும் முத்துச்சுண்ணம்பும்
வங்காள தேசத்துச் சோங்காளச் சோம்பும்
வாங்கியே வந்தால் பாங்கியே வாறேன்;
ஐலேலோ ஜலலோ!

### விருந்து விமரிசை

முத்தாஜி ஜிலேபியும் முறுக்குலட்டு பூந்தி வடை;
தட் டோடே வாங்கித் தாறேன்; தங்கமே தங்கம், நீவாகொழந்தாய்;
தன்னனே, தன்னனனே!

### கத்திரிக்காய் பொரியல்

பிஞ்சுக் கத்தரிக்காய்ப் போரியல்;
பின்னும் கொஞ்சம் நெய் ஊத்து.

### நெய் ஊற்று

அத்தை, அத்தை, நெய் ஊத்து;
அன்பாய் அன்பால் நெய்ஊத்து;
அகத்திக் கீரை புண்ணாக்கு,

அதிலே கொஞ்சம் நெய் ஊத்து*
இந்த உருளைக் கிழங்கிலே,
இன்னும் கொஞ்சம் நெய் ஊத்து
பிஞ்சுக் கத்திரிக் காயிலே,
பின்னும் கொஞ்சம் நெய் ஊத்து
மெதுவாய்க் கொஞ்சம் நெய் ஊத்து
மேலும் கொஞ்சம் நெய் ஊத்து*.
உள்ளங்கையில் குத்திக்காட்டும் பாட்டு]

## வடைப் பாட்டு

நல்ல உளுந்து வடையாம்;
காரம் போட்ட வடையாம்;
குதிச்சுக் குதிச்சுத் தின்கிருள்;
குசாலாய்த்தின்கிருள்.
மிளகாய்த் துண்டு சிறு துண்டு,
கடிச்சாளே நறுக்குன்னு;
துடிச்சுத் துடிச்சுக் கத்துகிருள்;
தேம்பித் தேம்பி அழுகிருள்.

## தோசைப் பாட்டு

தோசை அம்மா, தோசை;
நெய்யில் சுட்ட தோசை;
அரிசி மாவும் உளுந்து மாவும்
கலந்து சுட்ட தோசை;
அப்பாவுக்கு நாலு;
அம்மாவுக்கு மூணு;
அக்காவுக்கு ரெண்டு;

(பா-ம்) *குத்து, கத்தரிக்காய்ப் பொரியல்.

பாப்பாவுக்கு ஒண்ணு;
மெள்ள மெள்ளப் புட்டு,
சீனிநெய் தொட்டு,
சுடச்சுடச் தின்போம்;
போக்கிரித் தனத்தோடே;
இன்னும் கொஞ்சம் கேட்டோம்;
அடிவிழுகும்; அழுவோம்.

### துண்டு துணுக்குகள்

அப்பளம் தோசைவடை; ஆழ்வார் மண்டையைஉடை;
இன்னமும் தோசை வடை; இருக்கறவா மண்டை
உடை.

2

எண்ணெய்ச் சட்டி எண்ணெய்ச்சட்டி தடங்கலங்க,
எண்ணெய் போல வாடா சின்னத் தலங்கா;
காதுக் கடுக்கனைக் கழட்டி வச்சுத்
தாண்டவன் கோவிலிலே தண்ட னிட்டு
ஆக்கின அரிசி அதோடே;
குத்தின அரிசி முறத்தோடே

### துண்டு துணுக்கு

ஊரான் வீட்டுச் சோத்தைப்பார்;
ஊனப் பையன்* வயித்தைப்பார்.

25 *இடக்கர்ச்சொல்.

### காயிக் கொட்டை

அந்தமலை இந்தமலை; நடுஇருக்கும் சேர்வைமலை,
அந்தச் சேர்வைமலைக் காயிக்கொட்டை
சேலம் போயி நிக்குதங்கே.

### கள்ளுப் பாட்டு

கொம்பு போல் குடுவைக்குள்ளே
சோறு போல் கொதிக்கும் கள்ளே,
அன்புடன் வளர்த்த கள்ளே,
ஆதரிச் சணைச்ச கள்ளே,
எங்கு நீ சென்றொளிச்சாய்?
ஏழையேன் தவிக்கிறேனே!

### கள் வெறி

கள்ளுக் குடிச்ச வெறியிலே
கண்ணு ரெண்டும் தெரியலே;
நேத்தடிச்ச ஜுரத்திலே
எப்படி ஏறுவேன் மரத்திலே?

### சோறு போடு

துலுக்கச்சி புள்ளை பெத்தாள்
சோறு போடம்மா போடு.

### நாகப்பழம்

அம்மா வந்தாங்க தோப்புக்குள்ளே;
அன்று பழுத்ததாம் நாகப்பழம்'
கொட்டை இல்லாத நாகப்பழம்;
குலுங்கிப் பழுத்ததாம் நாகப்பழம்.

# எண்ணுக்கைப் பாடல்கள்

இந்தப்பகுதியில் ஒன்று, இரண்டு என்று எண்ணும் பொருள் களைப்பற்றிய பாடல்கள். உள்ளன. பாடல் முழுவதும் எண்கள் வராவிட்டாலும் தொடக்கத்தில் எண்ணும் முறை அமைந்திருக்கும்.

### எண்ணுவது

ஒண்ணரை குவரை டக்கரி டன்;
யாவல் காவல் மங்க்கி ஒன்;
யா யூ மே ப்ளக்;
ப்ளக்குத் தூக்கி மேலே போட்டால்
செட்டியார் விட்டு நண்டு;
நண்டைத் தூக்கிமேலே போட்டால்
நாக ரத்னப் பாம்பு;
பாம்பைத் தூக்கி மேலே போட்டால்
பஞ்ச வர்ணக் கிளி.
(நிற்கிறவன் பழம்.)

### எண்ணிக்கை வாய்பாடு

ஒண்ணுன்னு உலகமெல்லாம் கண்ணு;
ரெண்டுன்னு ஒலேக்பூச் செண்டு;
மூணுன்னு முத்தளக்கும் பேட்டை;
நாலுன்னு நாயக்குட்டி வாலு;

அஞ்சுன்னு பஞ்சவர்ணக்கிளி;
ஆறுன்னு ஆனைக்குட்டி வாலு;
ஏழுன்னு எழுதாணிக் கொட்டை;
ஒன்பதுன்னு ஓலைப்பூச் செண்டு;
பத்துன்னுப்பயத்தங்காய் நெற்று.

## மணிப்பிரவாளம்

ஒண்ணரை டுவரை டக்டற டன்;
யாவல் காவல் மஸ்டு பிடன்;
கள்ளன் குள்ளன் ட்வெண்ட்டிஒன்;
யாயூமே பிளக்.
பிளக்கைத் தூக்கி மேலே போட்டால்
செட்டியார் வீட்டு நண்டு,
நண்டைத் தூக்கி மேலே போட்டால்
நாகரத்னப் பாம்பு;
பாம்பைத் தூக்கி மேலே போட்டால்
பஞ்ச வர்ணக்கிளி;
கிளியைத் தூக்கி மேலே போட்டால்
கிருஷ்ண னுடைய கொண்டை.

## துண்டு துணுக்கு

தட்டு ஒண்ணு - தகதக ரெண்டு
மூக்கு மூணு - மூக்காலி நாலு.

## ஒன்று இரண்டு

1. தட்டு ஒண்ணு; - தாம்பாளம் ரெண்டு;
முத்து மூணு - முத்துச்சரம் நாலு;
2. மாருக்கும் தோளுக்கும் மஞ்சள் சரட்டுக்கும்
பாவக் கல்லுக்கும் பதினாறு கெரிப்புக்கும்
என்னைப் பெத்த ஆயாளுக்கும் பொன்னால சலங்கை.

3. புதை பொம்பரம் – செட்டி சிதம்பரம்;
கொக்கு கோலாடம்; – குருவி சிண்டாட்டம்.

## துண்டு துணுக்குகள்

ஒன்டுத்ரீ போர்க்கச் செப்பன்னு,
நீலகிரி ரோடுமேலே நிக்கச் செப்பன்னு;
ஒங்கப்பன் எங்கப்பன் மகாராஜா;
ஒங்கம்மா எங்கம்மா பிச்சைக்காரி.

★

பாக்குப் பாக்கு வெத்தலே பாக்கு,
டாம் டும் டஸ்;
சித்திரக் குட்டி கொய்யா.

★

ஏக்ரொட்டி தீண்பைஸா;
பேகுந்தரே வாங்கிக்கோ;
லேக் போத்தா டோண்ட் டாக்.*

★

அந்திப் பட்டை ஆலம் பட்டை;
டிரைலர் அம்மா புள்ளே பெத்தா;
டும் டும் டும்!

* துப:ம் கப்பல்றை ஐந்து சாடி

## ஐந்து பாஷைப்பாட்டு

ஏக் ரொட்டி; தீன்பைஸா;
பேருந்தரே, வாங்கிக்கோ;
லேக்போத்தா, டோண் டாக்.

## ஒன்று இரண்டுபாட்டு

ஒருகுடம் தண்ணிவாத்து ஒரேபூப் பூத்துது;
ரெண்டுகுடம் தண்ணிவாத்து ரெண்டேபூப் பூத்துது;
மூணு குடம். இப்படியே ஒன்பது குடம் வரையில்.
பத்துக்குடம் தண்ணி வாத்துப் பத்துப்பூப் பூத்தது.

★

[சிறுவர் எண்ணிக்கை கற்பதற்கு எளிதாகுமாறு எண்களைப் பாடலில் அழைத்துப் பாடுவார்கள்.]

ஒன்னு ரெண்டு பன்னிரெண்டு?
யார்சொன்ன பன்னிரண்டு;
நான்சொன்னேன் பன்னிரண்டு.

[இதைச் சொல்லும் போது வட்டமாகச் சிறுவர்கள் நின்று ஏறுவர் பின் ஏறுவராகச்சொல்லிப்பின் போவார்கள்.]

# குடும்பத்தைப் பற்றிய பாடல்கள்

இந்தப் பகுதியில் தாய் தந்தையர், சுற்றம் ஆகியவர்களைப் பற்றிய பாடல்கள் உள்ளன. மாமனைப் பற்றிய பாடல்களை இதில் சேர்க்கவில்லை. அந்தப் பகுதி தனியே இருக்கிறது.

### அம்மாவும் அப்பாவும்

(1)

மயிலே, குயிலே, எங்கள் அம்மாள்;
மயிலைப் போலே என்னைப் பெத்தாள்;
சீமைத் துரை எங்கள் அப்பன்;
சிமிழைப் போல எனை வளர்த்தான்.

(2)

பப்பா பப்பா - வாட்மை டியர்
மம்மா மம்மா - லீங்மை டியர்
திஸ்வே அண்ட் தட்வே
திஸ்வே அண்ட் தட்வே
Papa paPa - what my Dear?
Mamma Mamma leg my Dear.
How my Dear?
This way and tnat way;
this way anb that way.

[இருகையையும் கோத்துப் பாம்பு விரலைமட்டும் மடக்காமல் நிறுத்தி, 'திஸ்வே அண்ட் தட்வே' என்று சொல்றிச் சொல்லி ஒன்றை ஒன்றை மாற்றி மாற்றி அடிப்பது தன்னைத் தாய் எப்படி அடித்தாள் என்பதைத் தகப்பனுக்குக் காட்டுவது ஆகும்.]

## எங்கள் குடும்பம்

பத்து ஒரு பண்ணையைக் காரன் எங்கப்பன்;
பாவக் கோட்டுச் சீலைக்காரி எங்கம்மா;
வெள்ளரிக்காய் விக்கறவன் எங்கஷாள்;
வெள்ளாடு மேய்க்கிறவன் எங்கண்ணன்;
சிட்டுக் குருவி புடிக்கிறவன் என்தம்பி;
சும்மா கம்மா தின்கிறவன் நானு;
நாங்க நாற்பது ரூபாய் சாயச் சேலை
வாங்கிக் கட்டுவோம்;
நாங்க நாற்காலி மேலேறி
நாத்து நடுவோம்.

## நல்ல பிள்ளை

தத்தாங்கி தத்தாங்கி தட்டும் புள்ளை;
தயிரும் சோறும் தின்னும் புள்ளை;
அப்பம் சுட்டாலும் தின்னும் புள்ளை;
அவல் இடிச்சாலும்புள் தின்னும்புள்ளை.

## முறை மயங்கின கதை

[ஒருவர் காசிக்குப் போய்ப் பல ஆண்டுகள் இருந்து விட்டார். மீட்டும் வந்த போது, அவர் மகனுக்கு ஒரு பெண்ணும் பிள்ளையும் இருந்தார்கள். அடையாளம் தெரியாமல் அந்தப் பெண்ணை மணக்க ஏற்பாடாயிற்று. பெண்ணின் தம்பி சாப்பிடக் கூப்பிடுகிறான்.]

காசி வாசிப் பிராம்கணரே,
பகல் வந்த முறைக்கு நான் மைத்துனனே;*
மகனு ராகிய மாமனுள் கூப்பிடுகிறுர்;
சாப்பிட வாரும் பாட்டனுரே!

மாமா, மருமகனே, மைத்துனு, என் தம்பி,
சித்தப்பா என்மகனே, சீராளா, கண்வளராய்.

### எங்கள் அண்ணன்

ஒரு கட்டு மூங்கில் பொளந்து
பெருநாள் சிறு நாள் கப்பல் ஜோகுச்சுக்
கப்பல் மேலே கைகொண்ட மந்திரிஎங்கள்
அண்ணனுக்கு,
தங்கக் கரண்டக் காயாம்; - எங்கள் அண்ணனுச்கு;
தாளிற் சுண்ணும்பாம்; - எங்கள் அண்ணனுக்கு;
பொன்னுக் கரண்டக் காயாம்; - எங்கள் அண்ணனுக்கு;
போட்டுக்கச் சுண்ணும்பாம்;- எங்கள் அண்ணனுக்கு;
அரமனை வாசலிலே எங்கண்ணன்
அரைக்கிச் செருப் பெடுத்தான்;
கூத்தியார் வாசலிலே எங்கண்ணன்
கூலிக்கு வேலை செஞ்சான் எங்கண்ணன்.

### அண்ணுவுக்கு வேலை

பச்சரிசி, பனிப்பயறு போலே – எங்கள்
பட்சமுள்ள அண்ணுவுக்குப் பட்டணத்திலே வேலை.
கொட்டைப்பாக்கு, கொழுந்து வெத்தலை போலே
–எங்கள்
கோபமுள்ள அண்ணுவுக்குச் கொத்தவால் சாவடியிலே
வேலை.

---

(பா-ம்.)* அத்திம்பேரே.

இஞ்சி எலுமிச்சங்காய் போலே-எங்கள்
இஷ்ட முள்ள அண்ணாவுக்கு இஸ்டோரிலே வேலை.

## சவாரி வரும் தம்பி

ஒட்டையா வெட்டி ஒழுங்கல் கட்டி
ஓடுகிற தண்ணியிலே பாலம் கட்டிச்
சட்டம் செலுத்துறாம் நம்பசாமி;
சவாரி வாரத்தைப் பாருங்களே.
சப்பரம் வந்து சமஞ்சு நிற்கச்
சவ்வாளா, காடி வடம் புடிக்க;
இத்தனை பொண்டுகளா, வித்தாரக் காளிகளா,
நம்ப தம்பி சாமிக்கு ரெண்டு
வெத்தலைக் காம்பாலே வீசுங்களே.

## அக்காள்

சட்டியிலே மா அரைச்சுச் சந்து சந்தாக் கோலமிட்டுச்
சட்டி மூஞ்சி அக்காளே, செத்தெவந் தடியேண்டி;
மொந்தையிலே மாஅரைச்சு மூலையிலே கோலமிட்டு
மொந்தை மூஞ்சி அக்காளே, செத்தெவந் தடியேண்டி.

## வித்தியாசம்

ஆத்துக் குள்ளே ஊத்துத் தோண்டி
ஆகாசத்தில் ஏத்தம் போட்டு
அத்தைமகன் எறைக்கும் தண்ணி —
அத்தனையும் பச்சைத் தண்ணி;
என்பொறப்பு எறைக்கும் தண்ணி
எடுக்க எடுக்க இளநீர்த் தண்ணி.

## பாட்டி

பாட்டி, பாட்டி, பதக்கரிசி தீட்டி,
கோணக்காலை நீட்டி, குசுவிடடி பாட்டி!

## பாட்டி எங்கே போகிறாய்?

பாட்டி, பாட்டி, எங்கே போறே?
காரைக் காலுக்குப்போறேன்.
ஏன்? பேரனுக்குக் கல்யாணம்.
நானும் வருகிறேன்.
வழியெல்லாம் முள்ளாக் கெடக்கிறதே!
நீ என்ன போட்டுண்டு போறே?
செருப்புப் போட்டுண்டு போறேன்;
எனக்கும் செத்தெத் தாயேன்;
என்பேரன் வைவான்.
உன், பேரனைக் கெணத்தில் தூக்கிப் போடேன்.

□

# குழந்தைப்பாடல்கள்

[குழந்தையைப் பலவிதமாக விளையாடச் சொல்லுதல்]

## ஆனை ஆனை

### குழந்தைப்பாட்டு

[குழந்தையை உட்கார வைத்து முன்னும் பின்னும் ஆட்டும் போது பாடும் பாட்டு.]

ஆனை, ஆனை, அழகர் ஆனை,
அழகிய எம்பெருமான்* ஏறும் ஆனை
(அழகரும் சொக்கரும் ஏறும் ஆனை)
குட்டிக் கரும்பை முறிக்கும் ஆனை,
எட்டித் தேங்காயைப் பறிக்கும் ஆனை,
குட்டி ஆனைக்குக் கொம்பு முளைச்சதாம்;
பட்டண மெல்லாம் பறந்தோடிப் போச்சாம்.

---

(பி-ம்.)* தேப்பெருமாள். + காட்டுக் கரும்பை முறிக்கும் ஆனை,

காவேரித் தண்ணியைக் கலக்கும் ஆனை,
செல்லக் கரும்பைப் பறிக்கும் ஆனை,
தெரு வெல்லாம் சுத்தி ஓடும் ஆனை.

## 'இங்கு' கேட்கும் குழந்தை

[சிறுகுழந்தை முதல் முதல் பேச ஆரம்பிக்கும் போது 'இங்இங்' என்ற சப்தத்தையே தொனிக்கத் தொடங்கும். அதைச் செங்கீரைப் பருவம் என்றுசொல்வார்கள். அப்போது பெரியோர்கள் அதைப் பார்த்துச் சொல்லும் பாட்டு.]

இங்கு கேட்கிற சங்கு;
வார்த்தை கேட்கிற வண்டு;
பேச்சுக் கேட்கிற பூச்சி;
கார்த்திகை மாசத்து நிலாவோ?

## (கண் கட்டி விளையாடுதல்)

என் உலக்கை சந்தைக்குப் போச்சு;
என் உலக்கை நெல்லுக் குத்து.

## குழந்தைக்குப் பழம்

ஆனை வந்ததாம் தோப்பிலே;
அளியப் பழுத்ததாம் மாம்பழம்;*
குதிரை வந்ததாம் தோப்பிலே;
குலுங்கப் பழுத்ததாம் கொய்யாப்பழம்.

★

ஆனை வந்ததாம் தோப்பிலே;
அளியப் பழுத்ததாம் நாகப்பழம்;
பறிச்சுப் பறிச்சுத் தின்னுதாம்;
கொட்டையைக் கீழே உமிழ்ந்ததாம்;
குழந்தைக்கு நிறையப்பழம் தந்ததாம்.

---

* (பா-ம்)நாகப்பழம்.

## குழந்தைக்கு மருந்து

இருமக் கூடச் சக்தி இல்லையே!-கண்மணியே,
குடிகுடிச்ச சத்தத்திலே.
சாரல்மழை பெய்யுதம்மா-கண்மணியே,
சனங்க ளெல்லாம் ஓடுதம்மா.
நெஞ்சுச்சளி புடிச்சிக்கிட்டுக்-கண்ணே, உனக்கு
நிற்கக் கூடச் சத்தியில்லையோ?
மண்டையடி பொறுக்கலையோ?-கண்ணே, உனக்கு
மருந்தரைச்சுப் போடட்டுமா?
கோரோசனை குடுக்கட்டுமா?-கண்ணே, உனக்குக்
குருமாத்திரை குடுக்கட்டுமா?
ஏலமும் இஞ்சிச் சாறும்-கண்ணே உனக்கு
எட்டுச் சொட்டுக் குடுக்கட்டுமா?

## குழந்தைகள் வேடிக்கைப்பாட்டு

தடலங்கா, புடலங்கா, தாடிக் கொம்பு மாதளங்கா,
பச்சரிசி குத்திக்குத்தி, பரண்மேலே வச்சுவச்சு,
எழவெடுத்த பூனைக்குட்டி எட்டிஎட்டிப் பார்க்குதாம்.

## குழந்தைகுதித்து விளையாடுதல்

தைதை மாணிக்கம், தஞ்சாவூரு மாணிக்கம்;
கோவில் சோறு மிஞ்சிப் பூடறது;
கூத்தாடடி மாணிக்கம்.

## குழந்தை சாய்ந்தாடல்

சாய்ந்தா டம்மா, சாய்ந்தாடு;
தாமரைப் பூவே, சாய்ந்தாடு;

குத்து விளக்கே, சாய்ந்தாடு;
கோயில் புறுவே, சாய்ந்தாடு;
பச்சைக் கிளியே, சாய்ந்தாடு;
பவழக் கொடியே, சாய்ந்தாடு;
சோலைக் குயிலே, சாய்ந்தாடு;
சுந்தர மயிலே, சாய்ந்தாடு;
கண்ணே மணியே, சாய்ந்தாடு;
கற்பகக் கொடியே, சாய்ந்தாடு;
கட்டிக் கரும்பே, சாய்ந்தாடு;
கனியே போலே சாய்ந்தாடு.

## குழந்தை தலை ஆட்டுதல்

சின்னி தலை நொந்ததே;*
சின்னம்மா தலைநொந்ததே, நொந்ததே*
பாபி தலை நொந்ததே; பாப்பம்மாதலை நொந்ததே;*
பாப்பம்மா தலை நொந்ததே.*

## குழந்தைப் பாட்டு

தும்பி, துளசி, தூக்கிப் போட்டால் மம்முட்டி;
நாலு கரண்டி நல்லெண்ணெய் நாற்பத்துநான்கு
துப்பட்டி;
வாடாஜயா சுப்பையா, விலங்கு போட்ட மீனாட்சி,
தோட்டத்திலே கீரை—துலுக்கனி பொண்ணு ஜாடை.

## குழந்தையைத் தேடுதல்

என்குழந்தை போன இடம் எனக்குத்தெரி யாதே,

---

(பா—ம்) நொஞ்சினேன்.

என்றன் துரை மிக்கோபி; என்ன சொல்லு வாரோ?
நல்ல சிறு தொட்டில் கட்டி நான்வளர்த்த மகவு;
நான் வளர்த்த மகவுதனை நஷ்டமிட்டவளாரோ?
தங்கச் சலங்கைகட்டித் தரையில் விட்ட மகவு;
தலையில் விட்ட மகவு தனைச் சாத்திக் கொண்டவள்
ஆரோ?
வெள்ளியினுல் சலங்கைகட்டி வெளியில்விட்ட மகவு,
வெளியில் விட்ட மகவுதனை மடக்கிவச்சவ ளாரோ?
கூவும் குயில் தொனியுடனே கொஞ்சிவரும் பாலன்,
கொஞ்சிவரும் பாலன்தனைக் கூவிஅழைத்தவள்ஆரோ?
தங்கத்துரை என்றன்சாமி, தானென் சொல்லுவாரோ?
மாயமலைப் பழனியாண்டி, வேளே, கிருபை செய்வாய்.

## குழந்தையைப் பாலுண்ணஅழைத்தல்

வாராயென் கண்ணு, வந்தென் பாலை உண்ண;
சீராகத்தின்ன, சீக்கிரம்வா மன்னு;
நித்திரை விட்டெழுந்து நேரமாச்சு தின்னு
தத்தித் தவழ்ந்து தனயனே நீ நன்று;
நெஞ்சு உலருமடா; கெஞ்சி அழைச்சேண்டா;
வஞ்ச மேண்டா நோக்கு? வலுவில் அழைச் சேண்டா.
குஞ்சுமணிச் சலங்கை கொண்டு வந்தேண்டா;
பஞ்சணை ஊஞ்சலிட்டு இங்ஙனமே வாடா;
தேவானு கூலா, தேவகி தேவி பாலா,
வேணுகோ பாலா, வேண்டினேன் தயாளா!

## கையை விடு

ஒருகுதிரையாம் பக்கத்திலே;
ஒருகட்டுச் செவராம் பள்ளத்திலே*;

---

(பா-ப) * பல்லத்திலே.

சிறுக்கி கும்மி அடிக்கையிலே,
சீவரசம் மின்ன நடக்கையிலே,
ஆகாசத் தேர் வந்தால் – ஆகாதையா;
ஐயம் பெருமாளே, கையை விடு;

## கைவீசுதல்

கைவீ சம்மா, கைவீசு;
கடைக்குப் போகலாம் கைவீசு;
மிட்டாய் வாங்கலாம் கைவீசு;
மெதுவாய்த் தின்னலாம் கைவீசு;

*

முறுக்கு வாங்கலாம் கைவீசு;
முடுக்காய்ச் சாப்பிடலாம் கைவீசு,
சொக்காய் வாங்கலாம் கைவீசு;
சொகுசாய்ப் போடலாம் கைவீசு;
கம்மல் வாங்கலாம் கைவீசு;
காதிலே போடலாம் கைவீசு;
கோயிலுக்குப் போகலாம் கைவீசு;
கும்பிட்டு வரலாம் கைவீசு;
லட்டு வாங்கலாம் கைவீசு;
பிட்டுத் தின்னலாம் கைவீசு;
பழங்கள் வாங்கலாம் கைவீசு;
பரித்து புசிக்கலாம் கைவீசு;
அப்பம் வாங்கலாம் கைவீசு;
அமர்ந்து தின்னலாம் கைவீசு;
பூந்தி வாங்கலாம் கைவீசு;
பொருந்தி உண்ணலாம் கைவீசு;

பழங்கள் வாங்கலாம் கைவீசு;
பரிந்து புசிக்கலாம் கைவீசு;
தேரைப் பார்க்கலாம் கைவீசு;
திரும்பி வரலாம் கைவீசு.

### சாய்ந்தாடல்

சாய்ந்தா டம்மா, சாய்ந்தாடு;
சாயக் கிளியே, சாய்ந்தாடு;
குத்து விளக்கே, சாய்ந்தாடு;
கோவில் புருவே, சாய்ந்தாடு;
அன்னக் கிளியே, சாய்ந்தாடு;
திண்ணையின் கீழே தவழ்ந்து விளையாடும்
தேனே, மணியே, சாய்ந்தாடு;
கண்ணே, மணியே, சாய்ந்தாடு;
கற்பகக் கொடியே, சாய்ந்தாடு;
சோலைக் கிளியே, சாய்ந்தாடு;
சுந்தர மயிலே, சாய்ந்தாடு.

### குழந்தைக்குச் சோறு ஊட்டுதல்

காக்கா, கண்ணுக்கு மைகொண்டுவா;
குருவீ, கொண்டைக்குப் பூக்கொண்டுவா;
கொக்கே, குழந்தைக்குத் தேன் கொண்டுவா;
கிளியே, கிண்ணத்தில் பால் கொண்டுவா;
அப்பா, முன்னே வாருங்கோ;
அழாதே என்று சொல்லுங்கோ.

(2)

நடுவீட்டில் வையே - நல்ல துதி செய்யே;
வெள்ளிக் கிண்ணத்தில் பாலும் சோறும்
எடுத்து அப்பன் வாயில் ஊட்டு;
அள்ளி வாயில் ஊட்டு;

கொஞ்சிக் கொஞ்சி ஊட்டு;
குழந்தைக்குச் சிரிப்புக் காட்டு.

(3)

சும்ம, சும்ம, பூச்சி;
இன்னம் கொஞ்சம் சோச்சி;
பின்னும் கொஞ்சம் பாச்சி;
எல்லாம் செரிச்சுப் போச்சா?
இன்னும் பெரு மூச்சா?
நில்லு, உண்ட தாச்சா?
நீயே பெரும் பாச்சா.

(4)

சும்ம சும்ம பூச்சி, சின்னக் கிண்ணி தேச்சி,
இன்னம் கொஞ்சம் சோச்சி, பின்னும் கொஞ்சம் பாச்சி;
எல்லாம் செரிச்சுப் போச்சா? இன்னும் பெருமூச்சா?
நில்லு உண்ட தாச்சா? நீயேபெரும் பாச்சா.

**குழந்தைக்கு தலையை வாரிப் பின்னுதல்**

கொட்டுக் கொட்டுப் பேனே,
கோடாலிப் பேனே,
மந்து மந்துப் பேனே,
மகராஜன் தலையிலே வந்திறங்கு; வந்திறங்கு.

**தவலைச் சோறு**

தத்தளை, பித்தலை, தவலைச் சோறு;
சுத்து மரத்திலே சுளை போடு;
பறையன் வந்து விளக்குத் தூக்கப்
பள்ளி வந்து வீராடக்
குப்பை மேனி யம்மா சோருக்கக்
குருவி வந்து சொத்திண்டு போச்சு*

(பா-ம்) * போயிட.

## தோள்வீசுதல்

தோள் வீசம்மா, தோள்வீசு;
சுந்தரக் கிளியே, தோள்வீசு;
பச்சைக் கிளியே, தோள்வீசு;
பவழக் கொடியே, கைவீசு;
திண்ணையின் கீழே தவழ்ந்து விளையாடும்
தேனே, மணியே, கைவீசு.

## பிள்ளை பெறுதற்

எண்ணெய்ச் சட்டி, எண்ணெய்ச்சட்டி, தளதளெங்க
என்னைப் பெத்த மாதா சின்னச் சதங்கை;
முத்துக் கடுக்கனைக் கழட்டி வச்சேன்;
மூதேவி கோவில்லே தண்ட மிட்டேன்;
ஆறுமாசம் புள்ளையைப் பெத்தெடுத்தேன்;
அங்கம்மா சோவிலிலே தாலாட்டி
ஆத்து மணலிலே ஊத்தப்பூ
அம்மாயி கொண்டைக்கு ஏத்தபூ.

# தாலாட்டுப் பாடல்கள்

[கொஞ்சியும், கொஞ்சியும், அச்சுறுத்தியும்பாடுதல்]

## தாலாட்டு

(1)

அடிச்சாரைச் சொல்லியழு; ஆக்கினைகள் பண்ணி
வையபோம;
கண்ணே அடிச்சார்ஆர்? கற்பகத்தைத் தொட்டார் ஆர்?
தொட்டாரைச் சொல்லி அழு; தோள்விலங்கு
போட்டு வைப்போம்;
பாட்டி அடிச்சாளோ, பால் ஊட்டும் கையாலே?
அத்தை அடிச்சாளோ, அமுதூட்டும் கையாலே?*
மாமன் அடிச்சானோ. மகிழ்ந்தெடுக்கும் கையாலே?
அண்ணன் அடிச்சானோ, அணைத்தெழுக்கும் கையாலே?

(2)

அடிச்சாரைச் சொல்லியழு; ஆக்கினைகள் பண்ணிவைப்
போம்;
தொட்டாரைச் சொல்லிஅழு; தொழுவில் கிடாசிவைப்போம்;
மண்ணால் விலங்குபண்ணித் தண்ணீரில் போட்டு
வைப்போம்;
வெண்ணெயால் விலங்குபண்ணி வெய்யிலிலே
போட்டு வைப்போம்;

---

(பா-ம்.) * அனைவருக்கும் கேட்கும்படி.

நாக்கை அறுத்துவைப்போம்; நகரைவிட்டே ஓட்டி
வைப்போம்;
பல்லைப் புடுங்கிவைப்போம்; பட்டணத்தில் ஓட்டிவைப்போம்

(3)

அம்மா வர நேரம் செல்லும்; தூங்கு பேபி தூங்கு;
காக்காய் வந்து கண்ணைக் குத்தும்; தூங்குபேபி தூங்கு;
கழுகு வந்து குடலை அறுக்கும்; தூங்குபேபி தூங்கு;
அப்பாவர நேரம் செல்லும்; பேபி தூங்கு,

(4)

அம்மான் களத்திலே, அவள் அவலுக்கு நெல்கேட்டாள்;
பாட்டனார் களத்திலே பொரிக்குப் பயறு கேட்டாள்;
அம்மான், பொன்னான வாயாலே போ என்று சொல்லாமே
பொன்னின் சிலம்பாளைப் பூவாலே விட்டெறிஞ்சான்;
வெள்ளிச் சிலம்பாளை வேலாலே விட்டெறிஞ்சான்;
தங்கச் சிலம்பாளைச் சந்தனத்தால் விட்டெறிஞ்சான்;
அழுது கொண்டு போய் அவள் ஐயருடன் சொல்லி அழ,
ஐயர், மானம் களமாக்கி மல்லிகைப்பூ நெல்லாக்கி
பூமி களமாக்கிப் பிச்சிப்பூ நெல்லாக்கி
காசை அவலாக்கிக் கைநிறையத் தந்தாராம்;
பணத்தை அவலாக்கிப் பைநிறையத் தந்தாராம்.

(5)

அவரை உலையாதே; அவரையின் கீழ் நில்லாதே;
ஆளான ஆள்மன்னன் அவர்வீடும் காவல்;
அவர், சேனைக்கும் காவல்; சென்றுநீர் காண்பீரே;
ஆராரோ ஆரிரரோ, ஆராரோ!*

---

* தந்திரமாகத் தாலாட்டி உணர்த்துதல்.

(6)

1. ஆண்டம்மான் என்ன தந்தான்? ஆனை குடுத்து
விட்டான்;
குட்டியம்மான் என்ன தந்தான்? குன்றிமணித்
தொட்டிலிட்டான்;
செல்லம்மான் என்ன தந்தான்? செம்பவழத்
தொட்டிலிட்டான்;
நல்லம்மான் என்ன தந்தான்? நற்பவழத்தொட்டிலிட்டான்

2. ஆளப் பிறந்தானுக் காரார்கள் தோழன்மார்?
கிழக்குத் தெருவினிலே கிளிப்பிள்ளை தோழன்மார்;
மேற்குத் தெருவினிலே மேதாவி தோழன்மார்;
தெற்குத் தெருவினிலே வசுதேவர் தோழன்மார்.

(7)

ஆரடிச்ச கண்ணீர் ஆறாய்ப் பெருகிறதே?
தாயடிச்ச கண்ணீர் தண்ணீராய் ஓட்றது;
குட்டையாய்த் தேங்கிக் குதிரை குளிச்சேறி,
வாய்க்காலாய்ப் பாஞ்சு வழிப் போக்கர் தால்அலம்பி
இஞ்சிக்குப் பாஞ்சு, எலுமிச்சை வேரோடி,
நார்த்தைக்குப் பாஞ்சு, நடுவே பலாப்பழுத்து,
மாதுளைக்குப் பாஞ்சு, மருதாணி வேரோடி,
மாதுளைக்குப் பாயறச்சே மாறித்தாம் கண்ணீர்.

(8)

ஆராரோ ஆரரிரோ ஆராரோ ஆரரிரோ
சீரார் பசுங்கிளியே, தெவிட்டாத செந்தேனே,
பேரார் குலக்கொழுந்தே, பெருமானே, கண்வளராய்;
மாணிக்கக் கால்நாட்டி வஜ்ர வடம்பூட்டி
ஆணிப்பொற்றொட்டிலிட்டேன்; அருமருந்தே
கண்வளராய்;
மானே; மரகதமே, மல்லிகையே, சண்பகமே,

தேனே, பசுங்கிளியே, செல்வமே கண்வளராய்;
பெருஞான வாரிதியாய்ப் பேருலகி லேஉதித்த
திருஞான சம்பந்தச் சீமானே, கண்வளராய்;
தப்பான புன்சமணச் சார்பைக் கழித்துயர்ந்த
அப்பா திருநாவுக் கரசே,நீ கண்வளராய்;
வேதாவும் காணு விமலனைப் பேதையிடம்
தூதா அனுப்பும் சுந்தரனே, கண்வளராய்.
வேணிப் பரன்கமல மெல்லடியே போற்றிசெயும்
மாணிக்க வாசகப்பேர் மாதவனே, கண்வளராய்.
ஆதி மறைப்பொருளை அகிலமிசை வள்ளுவராய்,
நீதி முறையருளும் நின்மலனே, கண்வளராய்.
வெம்மாயை நீக்கி ஒளியாக வந்துதித்த
நம்மாழ்வாரே,எங்கள் நற்றவமே, கண்வளராய்.
கருமமெலாம் போக்கும் கதியைத் தரவந்த
திருமழிசை ஆழ்வாரே, செம்மலே, கண்வளராய.
சுராமாளச் செய்து கஜம்அளித்தோன் சீர்பாடும்
இராமா நுஜனே, இலஞ்சியமே, கண்வளராய்.
அன்ன நடை மெல்லியர்கள் ஆசையுடன் முத்தமிடும்
நன்னு கன்ன தல்லிஎனும் நாயகியே, கண்வளராய.

(9)

ஆராரோ, ஆரிரரோ, ஆராரோ ஆரிரரோ!
தவமாம் தவம்இருந்தேன்; தரைமெழுகிக் கோலமிட்டேன்;
கண்டகண்ட கோவிலுக்குக் கைஎடுத்துக் கும்பிட்டேன்;
காணுத கோவிலுக்குக் காணிக்கை கட்டிவச்சேன்;
நேராத கோவிலுக்கு நெய்விளக்கு ஏத்திவச்சேன்;
போகாத கோவிலுக்குப் பொன்முடி கட்டிவச்சேன்;
ஆயிரமாம் காலம் அரசுக்கு நீர்சொரிஞ்சேன்;
தொண்ணூறு காலம் துளசிக்கு நீர்சொரிஞ்சேன்;
நட்டநடுச் சட்டத்திலே தொட்டிவிட வந்தாயோ?
கொட்டாரப் பந்தலிலே கோமேதகத் திண்ணையிலே
விஸ்தார வீதியிலே விளையாட வந்தாயோ?
பிள்ளைக் கலிதீர்த்த கண்மணியே, கண்வளராய்.

## (11)

ஆராரோ, ஆரரிரோ, ஆராரோ ஆரரிரோ;
முத்தே, பவழமே, முக்கனியே சக்கரையே,
கொத்து மருக்கொழுந்தே, கோமளமே கண்வளராய்;
பொன்னே, நவமணியே, பூங்கோடியே, பூஷணமே,
அன்னமே, எம்முடைய ஆசையே கண்வளராய்;
கற்கண்டே பாகே, கனிரசமே, செங்கரும்பே,
கற்பகமே, எம்முடைய காதலனே, கண்வளராய்;
திந்திக்கும் பாலே, தெவிட்டாத தெள்ளமுதே,
சித்தத்தி னுட்கனிக்கும் செங்கரும்பே, கண்வளராய்;
ஆணிப் பசும்பொன்னே, ஆராத தெள்ளமுதே,
மாணிக்கமே எங்கள் வாழ்வே, நீ கண்வளராய்;
அத்தை அடிச்சாளோ? அம்மான் அடிச்சானோ?
முத்துக்கண் ணீர்நிறுத்தி மோனமாய்க் கண்வளராய்;
பாட்டி அடிச்சாளோ பால் வார்க்கும் கையாலே?
வாட்டம் ஒழிந்து நீ மைந்தனே, கண்வளராய்;
மாமி அடிச்சாளோ மல்லிகைப்பூச் செண்டாலே?
சாமி, புலம்பாதே சண்முகமே, கண்வளராய்;
அத்தை மடிமேலும் அம்மான்மார் தோள்மேலும்
வைத்து முத்தாடும் மகிபனே, கண்வளராய்.

## (12)

[சோர நாயகனுக்குக் குறிப்பாகப் புலப்படுத்தியது.]
ஆராரோ, ஆராரோ, ஆராரோ, ஆரிரரோ,
பாவற் கொடியருகே பாம்புண்டு; பல்லியுண்டு;
பார்த்துக் கிடவும், பதனமாய்ப் பூச்சியரே!
ஆராரோ ஆராரோ ஆராரோ ஆரிரரோ!
பாலும் அடுப்பினிலே; பாலகனும் தொட்டிலிலே;
பாலகனைப் பெத்தெடுத்த பார்த்தாவும் கட்டிலிலே;
ஆராரோ ஆராரோ ஆராரோ ஆரிரரோ.

கொள்ளி எடுத்தார்; குறைக்கொள்ளிவாயிலிட்டார்;
எல்லை கடந்தாரும், இனிவாரும் பூச்சியரே;
ஆராரோ ஆராரோ ஆராரோ ஆரிரரோ!

(13)

ஆராரோ, ஆராரோ, ஆரரோ ஆரிரரோ!
முத்தே, பாவழமே, முக்கனியே, சர்க்கரையே,
கொத்து மருக்கொழுந்தே, கோமளமே, கண்வளராய்;
ஆணிப் பசும் பொன்னே, ஆராத தெள்ளமுதே,
மாணிக்க மே, எங்கள் வாழ்வே, நீ கண்வளராய்;
அத்தை அடிச்சாளோ? அம்மான் அடிச்சானே?
முத்துக்கண் ணீர்நிறுத்தி மௌனமாய்க் கண்வளராய்;
பாட்டி அடிச்சாளோ பால்வார்க்கும் கையாலே?
வாட்டம் ஒழிந்து நீ மைந்தனே, கண்வளராய்;
ஆயர் குலத்துதிச்ச அருமந்த மாமணியே,
மாயனே, கண்ணு, மகிபனே, நீ கண்வளராய்.

(14)

ஆராரோ, ஆராரோ, ஆரிரரோ ஆராரோ!
ஆரடிச்சு நீ அழுறாய், அஞ்சணக்கண் மைகரைய?
மையும் கரைஞ்சு மதிமுகம் வாடினாலே
செய்யுமொரு காரியங்கள் தோணுமோ? பூங்கிளியே!*
பூங்கிளியே, பூங்கிளியே, இத்தனை நாள் எங்கிருந்தாய்?
மாசி மறைஞ்சிருந்தேன்; மகதேவர் பின்இருந்தேன்;
மகதேவர் பின்இருந்தேன், மாஞ்சோலைக்குள் இருந்தேன்
திங்கள் மறைஞ்இருந்தேன், தேவார்கள் பின்
இருந்தேன்;
தேவர்கள் பின் இருந்தேன்; தேடியிப்போ தங்க
வந்தேன்.

---

*(பா-ம்.) சித்தடியே.

(15)

அடிச்சாரைச் சொல்லிஅழு; ஆக்கினைகள் பண்ணி
வைப்போம்;
கண்ணனை அடிச்சாரார்? கற்பகத்தைத் தொட்டார்
ஆர்?
தொட்டாரைச் சொல்லி அழு; தோள்விலங்கு போட்டு
வைப்போம்;
பாட்டி அடிச்சாளோ, பால் ஊட்டும் கையாலே?
அத்தை அடிச்சாளோ, அமுதூட்டும் கையாலே?*
மாமன் அடிச்சானோ, மகிழ்ந்தெடுக்கும் கையாலே?
அண்ணன் அடிச்சானோ, அணைத்தெடுக்கும் கையாலே*

(16)

கண்ணான கண்ணனுக்கு கண்ணீரல்* வாராமல்
சுண்ணாம்பும் மஞ்சளுமாய்ச் சுத்தியெறி
கண்ணனுக்கு;
வேப்பிலையும் மஞ்சளுமாய் விசிறிஎறி, கண்ணனுக்கு.

(17)

ஆராரோ ஆரிரரோ ஆரிரரோ ஆராரோ!
மாணிக்கத் தொட்டிலிலே மதியமே, கண்வளராய்;
பொன்இழைச்ச தொட்டிலிலே புதுரவியே கண்வளராய்
வெள்ளியுள்ள தொட்டிலிலே வெண்முத்தே கண்
வளராய்.

(18)

1. ஆண்டம்மான் என்னதந்தான்? ஆனை குடுத்து
விட்டான்;

---

*(பாடம்) அனையவருக்கும் கேட்கும்படி அமைருயான
கண்ணாலே.

குட்டியம்மான் என்ன தந்தான்? குண்டு மணித்
தொட்டி விட்டான்;
செல்லம்மான் என்ன தந்தான்? செம்பவழத்தொட்டி
விட்டான்;
நல்லம்மான் என்னதந்தான்? நற்பவழத் தொட்டி
விட்டான்.

(19)

ஆளப் பிறந்தானுக் காரார்கள் தோழன்மார்?
கிழக்குத் தெருவினிலே கிளப்புள்ளை தோழன்மார்;
மேற்குத் தெருவினிலே மேதாவி தோழன்மார்;
தெற்குத் தெருவினிலே தேவர்கள் தோழன்மார்;
வடக்குத் தெருவினிலே வசுதேவர் தோழன்மார்.

(20)

கண்ணை அடிச்சார் ஆர்?
கண்மணியைத் தொட்டார் ஆர்;
பொன்னை அடிச்சார் ஆர்?
பூங்கிளியைத் தொட்டார் ஆர்?

தாலாட்டு

(21)

ஆராரோ, ஆராரோ, ஆராரோ; ஆரிரரோ!
ஆரார் அடிச்சாரோ? - என் - ஆலைப் பசுங்கிளியே,
ஆரும் அடிக்கவில்லை; அண்ணியரும் தீண்டவில்லை;
தாயும் அடிக்கவில்லை; தந்தையரும் தீண்டவில்லை;
தானே அழுகிற தன்கணக்கும் பொல்லாங்கு;
வேண்டி அழுகிற விளையாட்டும் பொல்லாங்கு;
சித்தடியே, சித்தடியே நான் செய்ததவம் நீகேளாய்;
சித்தடியே, நீபொறக்க - நான் - செய்ததவம் ரொம்ப
உண்டு;

(என்) ஆளப் பொறந்தான் அழுகிற குரல்கேட்டு
மாடப் புருக்களெல்லாம் வந்து மதிலடிக்குக்
கூவப் பொருதே குரல் கேட்டு நிற்கிறது;
பேசப் பொருதே பின்னேவந்து நிற்கிறது;
அம்புலியை வேண்டி அரையர் தவம் வேண்டிச்
சந்திரரை வேண்டிச் சரஸ்வதியைத் தான்வேண்டி.

## (22)

ஆராரோ, ஆராரோ, ஆரிரரோ, ஆராரோ,
ஆரடிச்சு நீ அழுருய் அஞ்சனக்கண் மைகரைய?
மையும் கரைஞ்சு மதிமுகம் வாடிஞலே
செய்யுமொரு காரியங்கள் தோணுமோ பூங்கிளியே?
பூங்கிளியே, பூங்கிளியே, இத்தனை நாள் எங்கிருந்தாய்?
மாசி மறைஞ்சிருந்தேன்; மகதேவர் பின்இருந்தேன்;
மகதேவர் பின்னிருந்தேன்; மாஞ்சோலைக் குள்
இருந்தேன்;
திங்கள் மறைஞ்சிருந்தேன்; தேவர்கள் பின்
இருந்தேன்;
தேவர்கள் பின்இருந்தேன்; தேடியபோ திங்கு
வந்தேன்.

## (23)

ஆராரோ ஆராரோ ஆராரோ ஆரிரரோ!
ஆரார் அடிச்சாளோ? - என் - ஆலைப் பசுங்கிளியே,
ஆரும் அடிக்கவில்லை; - ஒரு - அன்னியரும் தீண்ட-
வில்லை;
தாயும் அடிக்கவில்லை; தந்தையரும் தீண்டவில்லை;
தானே அழுகிற தன்கணக்கும் பொல்லாங்கு;
வேண்டி அழுகிற விளையாட்டும் பொல்லாங்கு;
சித்தடியே, சித்தடியே - நான் - செய்ததவம்
நீகேளாய்:

சித்தடியே, நீபிறக்க – நான் – செய்ததவம் ரொம்ப
உண்டு;
(என்) ஆனப் பொறந்தான் அழுகிற குரல் கேட்டு
மாடப் புருக்காளல்லாம் வந்து மதிலடிக்க,
கூவப் பொருதே குரல்கேட்டு நிற்கிறது;
பேசப் பொருதே பின்வந்து நிற்கிறது;
ஆளப் பொறந்தானுக் காரார் துணை இருப்பார்?
சாமத் துணையிருப்பார் சந்திரரும் சூரியரும்;
பின்னே துணையிருப்பார் பெருமாளும் பிராட்டியரும்;
அம்புலியை வேண்டி அரையர் தவம் வேண்டிச்
சந்திரரை வேண்டிச் சரஸ்வதியைத் தான்வேண்டி.

## (24)

ஆராரோ, ஆராரோ, ஆராரோ, ஆராரோ,
சீராரர் பசுங்கிளியே, தெவிட்டாத செந்தேனே,
பேரார் குலக்கொழுந்தே, பெருமானே, ஆராரோ!
இருகண் மணியே, இலஞ்சியமே, என் உயிரே,
ஒருகுடைக்கீழ் நீஇவ் வுலகாள வந்தவனோ? ஆராரோ!
தெள்ளமுத கும்பமே, திந்திக்கும் செங்கரும்பே,
பிள்ளைக் கலிதீர்த்த பெரியமத குஞ்சரமே, ஆராரோ!
மாணிக்கக் கால்நாட்டி வஜ்ர வடம்பூட்டி
ஆணிப்பொற் றெட்டிவிட்டேன் அருமருந்தே கண்
வளராய்; ஆராரோ .

## (25)

ஆராரோ, ஆராரோ, ஆரரோ, ஆரிரரோ. என்றால்
ஜயனே, ஆராரோ, என் செல்ல மணித்துரையே, என்
சீமானை அடிச்சவர் ஆர்?
என்வயிற்றில் வாய்த்தவனே, என் ஏக்கமெல்லாம்
தீர்த்தவனே

கண்மணியே, பொன்மணியே, கானகத்துக் கரு
மணியே,
நான் வளர்த்த நாகமணி நல்லயளே தாலேலோ;
தாழை ஒருமடலாம், தாழை, பூக்கறது ஆயிரமாம்;
தழைசுத்திப் பூஎடுக்கும் தருமராம் உங்கள் ஐயா;
புன்னை ஒருமரமாம், புன்னை; பூக்கிறது ஆயிரமாம்;
புன்னை சுத்திப் பூஎடுக்கும் புண்ணியரம் உங்கள்ஐயா;
கோடைப் பலாப்பழமாம்;- என்நல்லையனே,
நீ-கொஞ்சவந்த ரஞ்கிதமாம்;
மாசியின் மாவடுவாம்; என்நல்லையனே; நீ
வைகாசி மாம்பழம்;—ஆராரோ!

## (26)

ஆராரோ, ஆரிரரோ, ஆரிரரோ ஆராரோ!
மாணிக்கத் தொட்டிலிலே மதியமே, கண் வளராய்;
பொன் இழைச்ச தொட்டிலிலே புதுரவியே, கண்
வளராய்;
வெள்ளியுள்ள தொட்டிலிலே வெண்முத்தே, கண்
வளராய்.

## (27)

1. ஆறிரண்டும் காவேரி; அதன் நடுவே ஸ்ரீரங்கம்;
சாமிரெண்டு கையாலே, தந்த என்றன் திரவியமோ?

2. பச்சை இலுப்பைவெட்டிப் பால்வடியத் தொட்டி விட்டுத்
தொட்டி விட்ட அம்மானே, நீ, பட்டினியாய்ப்
போகாதே.

3. ஆராரோ ஆராரோ, என்அரசே, ஆராரோ!
சீராரும் எங்கள் குல தீபமே, நீ ஆராரோ.

4. கங்கைபுனை ஸ்ரீநாதன் கருணையினல் என்வயிற்றில்
மங்களமாய் வந்துதித்த மணியே, நீ கண்வளராய்;

5. பாலே, பழரசமே, பகரவொண்ணுத் தெள்ளமுதே,
மேலேவிண்ணேர் மகிழும் வித்தே, நீ கண்வளராய்.

6. வேதமனு நூற்கலைகள் விளங்கிவரும் இந்நாட்டில,
கீதமொழி கேட்கவந்த பைங்கிளியே, துயில்கொள்வாய்.

7. வண்ணமணித் தொட்டிலிலே வாய்த்த செம்பொற்
கட்டிலிலே
கண்ணே, என் கண்மணியே, கற்பகமே;
நித்திரை செய்.

8. தண்டைமனி சத்தமிடத் தாய்மார்கள் முத்தமிடத்
தொண்டையுடன் வாய்மூடித் துரைமகனே, கண்ணயர்
வாய்.

9, அத்தைமனம் நோகாமல் (உன்)அண்ணன்மனம்
வேகாமல்
சித்தமதில் தயைகொண்டு சிகாமணியே,
கண்உறங்காய்.

10. தாய்மார்கள் வைதாரோ? தாதியர்என் செய்தாரோ?
வாய்திறந்து சொல்லிளங்கள் மன்னவனே,
கண்வளராய்.

11. அத்தை அடிச்சாளோ? அக்காள் அடிச்சாளோ?
சித்தான வாய்திறந்து மொழிந்துறங்காய், கண்மணியே!

12, தங்கத்தால் யானைகளும் தந்தத்தால் சேனைகளும்
அந்தமாய் நான்கொடுப்பேன்; புத்திரனே, கண்
வளராய்.

13. பொற்சரிகை வஸ்திரமும் போற்றுபல சித்திரமும்
நற்சரிகை அங்கியுமே நான்தருவேன்; நித்திரைசெய்.

14. பஞ்சவர்ணக் கிளிகொஞ்சப் பாடும்குயில் ஓசைஎஞ்ச
வில்லாப் பஞ்சணைமேல் என்மகனே, கண்
வளராய்.

15. தந்தைஒரு பக்கம் நிற்கத் தாயும்ஒரு பக்கம்நிற்கச்
சிந்தைமகிழ் விற்பார்க்கும் நெருட்கடலே,
நித்திரை செய்.

16. சரியாய்த் தவம்தானம் தருமங்கள் செய்தஎங்கள்
கலிதீர்க்க வந்துதித்த காதலனே, கண்வளராய்.

17. இணையோ ருடன்தெருவில் இன்பமாய்த் தேர்உருட்டி
விளையாடி வந்துநின்ற வேலவனே,
நீதுயிலாய்.

18. மதுரையிலே குதிரை கட்டி மாந்தோப்பு விடுதிவிட்டுச்
சடுதியிலே வந்திறங்கும் - என் - செல்வமகன்
பாற்கடலே, உறங்குறங்கு.

19. அடிச்சாரைச் சொல்லிஅழு; ஆக்கினைகள் பண்ணி
வைப்போம்;
தொட்டாரைச் சொல்லிஅழு; தண்டனைகள்
பண்ணிவைப்போம்.

## (28)

ஐயர் ஐயர் என்று அவதரிச்ச காலமெல்லாம்
வையகம் புகழ வளர்ந்தார் சிலகாலம்;
பையவந்த சேவகனார் பாண்டியனார் வாசலிலே
கைஎடுக்கச் சேவகமும் கட்டியமும் இட்டாராம்;
எண்ணரிய செல்வமும் எனக்கேத்த பாண்டியர்க்குப்
புள்ளைவிடாய் தீர்க்கவந்த பொன்னு மணிவிளக்கோ?
மஞ்சள்விடாய் தீர்க்கவந்த வண்ண மணிவிளக்கோ?
வாளுக்கு ஆயிரம் பொன்; வருஷம்பதி னாயிரம்பொன்;

தோளுக்கு ஆயிரம்பொன் துரைக்குமுத்து ஆயிரமாம்;
எத்தனையோ காலம் தவசிருந்தேன்; என்னடி, நான்
புத்திவழி மாத்திவச்ச பொன்னு மணிவிளக்கோ?
உண்ணஒரு வீடாம்; உறங்க ஒரு மாளிகையாம்;
தன்னந்தனி அரமனையும் தயவுடனே கட்டிவச்சார்;
தாழையும் முள்ளும் தழைச்சிருந்த வாசலிலே,
தென்னையும் மாவும் தினந்தோறும் வச்சாரோ?
கள்ளியும் முள்ளும் கலந்திருந்த வாசலிலே,
வாழையும் பைங்கமுகும் வைக்கப் பொறந்தாரோ?
பொற்றொட்டில் இட்டு வளர்ப்பாளே மானிடத்தாய்;
பூந்தொட்டில் இட்டு வளர்த்தாளே புண்ணியரை;
மரத்தொட்டில் இட்டு வளர்ப்பாளே மானிடத்தாய்;
மார்த்தொட்டில் இட்டு வளர்த்தாளே மன்னவரை;
சிரவண உபநயனம் தான் கழிஞ்ச பிற்பாடு,
பட்டயம், பொற்கத்தி, வரிசை புலித்தோலாம்;

(25)

கட்டைதட்டிக் கல்இறடி - இடையன். எடுத்தெடுப் பால்கவிழ்ந்து
வெட்டின கட்டையிலே (நெல்வேலி நாதர்) வெட்சிப்
பூப் பூத்தாரோ? ஏழறையாம்; கோபுரமாம்
(நெல்வேலி நாதருக்கு) எறும்பேரு மண்டபமாம்;
பாம்பேரு மண்டபத்தில் (நெய்வேலி நாதர்)
பள்ளிகொள்ளப் போறாரோ?
சங்கர லிங்கம், தனுக் கோடி ராமலிங்கம்,
பூவைத்து லிங்கமதைப் பூசிக்க வந்த கண்ணோ?
சீயக்காய் நெல்லி சிறுபருப்புக் கஸ்தூரி
அரைச்சு வழிச்சாளாம் (நாச்சியாரம்மா).
அஞ்சுவகைக் கிண்ணியிலே;
முத்துக் குடைபிடித்து -(நாச்சியாரம்மன்)

முழுக வந்து நிற்கையிலே
பவளக் குடைபிடித்து (மன்னர்)
பக்கம்வந்து நின்றாராம்;
குளம்கலங்க நீர்முழுகிக்
கொடிபோல நாமமிட்டு
மலைகலங்கப் பாடிவரும் மன்னர் மருமகனோ?
வட்டப் பொட்டுமிட்டு – நாச்சியாரம்மன்
மயிரை இடைவகுத்து
இட்ட தொரு நாமம் ஏற்குமோ மன்னரே?
மன்னரும் கோதையரும் செணபகத் தோப்பு
மலைபார்க்கப் போகையிலே,
மலைமறிச்சு விருந்துசெய்யும் மலையப்பப் பெருமாளோ?
கண்ணாற் சிறுசதங்கை காலை அழுத்துமுன்னு
வெள்ளிச் சிறுசதங்கை, விலைமதியா வீரதண்டை.

## 26

கண்ணாலம் கண்ணனுக்கு;—என்கண்ணே,
கண்ணால மின்னுசொல்லிப்
பொன்னாலே ஆலாத்தி விட்டாளாம் தட்டாத்தி;
வாங்கு மணிவாங்கி வயிரமணிக் கல்லிழைச்சு,
தூங்குமணித் தொட்டிலிலே துரைமகனே,
நித்திரைபோ;
நித்திரைபோ, நித்திரைபோ, சித்திரப்
பூந்தொட்டிலிலே;
உறங்காத கண்ணுக்கு ஓலைகொண்டு மைஎழுதித்
தூங்காத கண்ணுக்குத் துரும்புகொண்டு மைஎழுதி
அஞ்சன் மையெழுதி அழகுக்கொரு பொட்டும்இட்டு,
ஆராரோ, ஆராரோ, ஆராரோ, ஆராரோ!

## 27

கண்ணுன கண்ணனுக்குக் கண்ணீரல் வாராமல்
சுண்ணும்பும் மஞ்சளுமாய்ச் சுத்தி எறி கண்ணனுக்கு;
வேப்பிலையும் மஞ்சளுமாய் விசிறி எறி கண்ணனுக்கு.

## 28

கண்ணே, உறங்குறங்கு, கண்மணியே நித்திரைபோ;
நித்திரைபோ, நித்திரைபோ, சித்திரப்பூந்
தொட்டிலிலே;
கண்ணே என் கண்மணியே, கற்பகமே, நித்திரைபோ;
பொன்னே உறங்குறங்கு; பூமரத்து வண்டுறங்கு;
கண்ணுன கண்ணுக்கொரு கண்ணேறு வாராமல்
சுண்ணும்பும் மஞ்சளுமாய்ச் சுத்திஎறி கண்ணனுகு.

## (29)

கண்ணே உறங்குறங்கு, கண்மணியே, தூங்குறங்கு;
தூங்காத கண்ணுக்குத் துரும்புகொண்டு மைஎழுதி
உறங்காத கண்ணுக்கு ஓலைகொண்டு மைஎழுதி
ஆருராங் கூடமெலாம் ஆடுதற்கு வந்தவனே?
பொன்னே உறங்குறங்கு; பூமரத்து வண்டுறங்கு;
கண்ணே உறங்கு; கண்மணியே உறங்குறங்கு.

## (30)

கண்ணே, உறங்குறங்கு; கான மயில்உறங்கு;
பொன்றேன, உறங்குறங்கு, புனத்துக் கிளிஉறங்கு;
மானிடச்சி வள்ளி, மலைமேல் குறத்திவள்ளி,
தேன்மொழிச்சி பெத்தெடுத்ததெய்வச்சிலையொளிர்வோ?
சீராரு மற்றோ? திருச்செந்தூர் வேலவனே?
வாருங்கு மற்றோ? வள்ளியரை மாலையிட;
வள்ளி அழகுக்கும் வலதுகொங்கைத் தேமலுக்கும்

சுடந்தல் அழகுக்கும் (வடிவேலர்) குறவேடம்
பூண்டாரோ?
சீனி மணலிலே (செந்திவேலவர்) திருவேட்டை
ஆடையிலே
வாச்சுதடி மான்வேட்டை வள்ளிமண வாளருக்கு;
வள்ளிக்கும் தேவானைக்கும் மயிர்பிடி சண்டையிலே,
வள்ளிமேல் குத்தமில்லை; மயிரைவிடு தேவானை;
பட்டுண்டோ செட்டி, பவளமுண்டோ வியாபாரி;
எல்லாச் சரக்குமுண்டு, இனிவாரக் கப்பலில்லை.

(31)

கண்ணே, உனக்குப்
பொற் சங்கால் போட்டினல் புத்தி குறையுமுன்னு
வெள்ளிச்சங்கால் போட்டினல் வித்தை குறையுமுன்னு
நடுக்கடலில் மூழ்கி நாரணனர் சங்கெடுக்கத்
திருப்பாற் கடல்மூழ்கித் திருமாலின் சங்கெடுக்கப்
பொருக்கென்றெழுந்து புறப்பட்டார் உங்கள்அம்மான்.

(32)

கண்ணே, என் கண்மணியே, காதல னே, உனக்குப்
பொற்சங்கால் போட்டினல் புத்தி குறையுமுன்னு
வெள்ளிச்சங்கால் போட்டினல் வித்தை குறையு
முன்னு
நடுக்கடலில் மூழ்கி நாரணனர் சங்கெடுக்கத்
திருப்பாற் கடல்மூழ்கித் திருமாலின் சங்கெடுக்கப்
பொருக் கென்றெழுந்து புறப்பட்டார் உங்களம்மான்.

(33)

கண்ணை அடிச்சார் ஆர்?
கண்மணியைத் தொட்டார் ஆர்?

பொன்னை அடிச்சார் ஆர்?
பூங்கிளியைத் தொட்டார் ஆர்?

(34)

கோலவளை பச்சைவளை கோவாத முத்தும்
குறத்தி கழுத்துத் தாழ்வடமும்
ஆருக் கிடுவோமுன்னு அலைஞ்சு தவிக்கறச்சே
எனக்கிடு இன்னுசொல்லி நரிபோல் குதித்தாயோ?
(என்) தனம்போலே குதிச்சு தானியத்தை ஆரடிச்சார்?
அடிச்சாரைச் சொல்லிஅழு; ஆக்கினைகள் பண்ணி வைப்போம்;
தொட்டாரைச் சொல்லி அழு; தொழுவில் கடாசி வைப்போம்;
மண்ணால் விலங்கு பண்ணி தண்ணீரில் போட்டு வைப்போம்;
வெண்ணெயால் விலங்குபண்ணி வெய்யிலிலே போட்டுவைப்போம்;
நாக்கை அறுத்து வைப்போம்; நகரைவிட்டு ஓடவைப்போம்;
பல்லைப் புடுங்கி வைப்போம்; பட்டணத்தில் ஓட்டிவைப்போம்.

(35)

நல்லம்மான் வாசலிலே நற்பவழத் தேர் ஓடும்;
ஆண்டம்மான் வாசலிலே ஆனைகட்டிப் போரடிக்கும்;
குட்டியம்மான் வாசலிலே குதிரைகட்டிப் போரடிக்கும்;
அம்மான் களத்திலே அவனுக்கு நெல்கேளு;
பொன்னான கையாலே போஎன்ன மாட்டாரோ;
பொன்னுச் சிலம்பெடுத்துபோவென்று விட்டெறிஞ்சார்;
வெள்ளிச் சிலம்பாலே வெண்கலத்தை விட்டெறிஞ்சார்;

அழுதுகொண்டு ஓடிவந்து அம்மாவிடஞ்
சொன்னான்;
என்றனுட கண்மணியே, எங்கு மிலாப் பொன்மணியே,
நயமுள்ள நவமணியே, ராகவனே தாலேலோ!
ஆயிரங் காலம் தவம் இருந்து அருமையாப் பெத்த
மணியே,
அழகான கண்மணியே, அற்புதமே, தாலேலோ!
என்றனுடசின்மணியே, யோகிகள் தேடும்மணியே,
நான் இட்ட கருமணியே, ராகவனே, தாலேலோ!

(36)

[குசலவர்களைச் சீதை தாலாட்டல்.]
பஞ்சவர் ணக்கிளியோ? பாரளந் தான்மகனோ?
கொஞ்சி அழவேண்டாம்; கோகிலமே கண்வளராய்;
பெத்ததாய் சுத்தமெல்லாம் பிள்ளையுடன்
சொல்லுகிறேன்;
உற்றார் மதிஉரைக்க உண்மைசொல்லக் கேள்மகனே!
இலங்கையிலே நான்பொறந்தேன்; தென்கடலில் நான்
பொறந்தேன்;
புங்கமுள்ள பொய்கையிலே போகமதாய நான்வளர்ந்
தேன்;
ராஜன் ஜனகனவர் நல்லபொருள் கண்டெடுத்து
பூங்களகந் தால்வளர்ந்த பூங்கிளியே கண்வளராய்;
(அப்போ) ஜனக ரவர்வளர்த்தார்; பொற்கொடியே
கேளுமுன்னோர்;
அறுபதி னாயிரம் வருஷம்அரசாண்ட தசரதர்க்குப்
புத்ரகாமேஷ்டியாகம்பண்ணிப்புத்திரனாய் உண்டானார்;

---

(பா-ம்.) புத்திரனாய்ப் பொறந்தாராம்.

ஏழாம் வயசு தன்னில் — உங்கள் ஐயா — இல்லாத
வித்தை கற்றார்;
தாழ்மை யெனும் தாடகையை ஸம்ஹரிந்து உங்தள்

சங்கரனார் வில் முறிச்சுத் தேவி தனை அடைஞ்சு
மங்களமாய் என்றனையும் மாலையிட்டார் உங்கள் ஐயா;
மாலையிட்ட நாள்முதலாய் வந்தகுறை* கேள்மகனே;
ஆலயத்தை நான்அறியேன்; அன்று
வனம்போனேன்,
வந்து சுகமறியேன்; வண்ணான் மொழிகேட்டு
உயிரோடே ஜானகியை ஓட்டு முன்னார் கானகத்தில்;
ஓட்டிவிடும் பொழுது உத்தமனார் நீங்கள்அப்போ
பூட்ட நரம்பெடுத்து ஆறுதிங்கள் என்வயிற்றில்,
காட்டில் விடும் பொழுது கண்டுவந்து வால்மீகர்
கூட்டி அழச்சுவந்தார்; குழந்தை பொறந்தேளோ.
ராமருட கண்மணியோ? ஜனகருட பேரர்களோ?
காகுஸ்தர் குமாரர்களே, கண்ணேநிர் கண்வளரீர்;
சுரமுனிவர் தாசர்களோ, குடிவழங்கும் பாலகரே,
குறைதீர்க்கும் அஞ்சனரே, ஆனைபடை அஞ்சாதே
வியாஸருட தாளர்களோ, கொஸல்யாள் கண்மணியோ
காகுஸ்தர் குமாரர்களோ? ரோமர் பாலகரோ?
தசரதர் பேரன்மாரோ? சிதையுட கண்மணியோ?
ஜனகருடை பேரன்மாரே,
அதிரூரக் குசலவாள் அவதாரம் ஆனீரோ?
ஆதிமகா விஷ்ணுவுக்கு அவதாரம் ஆனீரோ?

---

(பா-ம்.) * வாழ்ந்த குறை + இல்லறத்தில் வாழ்ந்தறியேன்.

(37)

பரத்தி மக்கள் தெய்வானையம்மா: பத்தினியார் இங்கிருக்கக்
குறத்திமகள் மையல் கொண்டு - செந்தில் வேலர்
குற வேஷம் பூண்டாரோ?
வெள்ளிக் குதிரையிலே - சுப்பையா - வேட்டைமுகம்
போகையிலே
அள்ளிப் பணம்குடுத்து - சுப்பையா - ஆண்குழந்தை
தந்தாரோ?
கந்தா, குமரா, உன் கடற்கரையில் தானம் பண்ணி
இந்தா குழந்தை என்று ஏந்தினர் ரெண்டுகையும்;
அடிக்கரும்பை வெட்டி ஆனைக்கே தீனிபோட்டு
நுனிக்கரும்பை வில் வளைக்கும் விஜயர் மருமகனே,
காணிக்கை நேர்ந்தேன்; கைநிறைந்த பொன் நேர்ந்தேன்;
மாணிக்கம் நேர்ந்தேன் - சுப்பையா - மணிக்குழந்தை
வேணுமின்னு;
அஞ்சுபணம் அஞ்சுமுழம் ஆனையடிக் கண்டாங்கி
கொண்டுவா கெட்டி, கோதையரை மாலையிட,
ஒருசாண் பலகையிலே ஒன்பது - பொன் மெத்தையிலே
விரிச்சுக் கணக்கெழுதும் விஜயர் மருமகனே?
சொல்லாயிரம் பொன்பெத்த சோழருடை வங்கிசமோ
மலடி மலடியின்னு மானிடர்கள் பேசாமல்
மலடிக்கும் புள்ளை கொடுப்பார் மகதேவர்;
இருசி, இருசியின்னு எல்லோரும் ஏசாமல்
இருசிகுலம் மாற்றவந்த ஏந்திழையே. நீ உறங்கு;
நெல்லிக்கு நெல்லி, நேரே திரு நெல்வேலி,
அள்ளிப் பணம் கொடுக்கும் ஆழ்வார் திருநகரி,
சாவடிக்குச் சமுதா டிடையிலிட்டு
சாவப்போர் என்று வரும் சமத்தர் மருமகனே?
எண்ணெய் தலைமுழுகி ஏகாந்தப் பொட்டுமிட்டு
வண்ணக் கவி பாடிவரும் மன்னர் மருமகனே?
ஆனைகட்டும் மண்டபம் ஆஸ்தானம் பத்தாமல்

குதிரைகட்டு வேணுமின்னு (என்அரசே)
சீமை கட்டி ஆண்டாரயோ?
வண்டலாம் பொட்டல்; வரிசைத் திருமலையாம்;
ஏலமும் கூறிச் சேத்தூர் பூமி, இல்லையின்று போகையிலே
வண்டுருக்கிப் பல்கடிச்சு - பெற்ற நாயகிஅம்மன்
மயில்வா கனத்தின் மேல் ஏறிச்
செண்டுப்பூ நடைநடந்து திருநெல்வேலி போய்ச்சேர்ந்து
ஊரும் திரும்பி - பெத்த நாயகி - உலகாள வந்தாளோ?
நெல்லிக்களம் அஞ்சு நிலை அஞ்சு கோபுரமும்
கல்வேலிக் குளமோ? நெல்வேலி நாதருக்குக்
கழுதாய் வளர்ந்தாரோ?
நெல்லையப்பர் கோவிலிலே நிற்குமந்தக் கல் எருது;
கல்லெருதும் புல்மேயக் கண்டாளாம் காந்திமதி;
திருநெல்வேலி மூலையிலே சிகரமுடி சாஞ்சுதுன்னு
பொன்காசு தானமிடும் புண்ணியருர் பேரரசோ?
கீழத் தெருவிலே கேளிக்கைப் பார்க்கையிலே
துப்பட்டி வாழ்த்தும் துரைராசர் பேரரசோ?
அம்ப நெறியாட்டி அருணகிரித் தீர்த்தமாடிக்
கொம்பநெறி கைதொழுது கோடிதவம் செய்தவளோ?
சீரான நோம்பு சிவன்நோம்பு நாளையின்னு
நாராயணன் நோம்புன்னு நாமம் தரிச்சாயோ?
பச்சைப் பனைகீறி - ராமசுவாமி -பாரவில்லை நாணேத்தி
பத்துத்தலை அத்துவிழ (ராம சுவாமி) பலகற்றுவிழ
எய்தாரோ?
ஏதுடா ராவணு, இறங்கடா மேடைவிட்டு;
பாரடா ராவணு,(ராமசுவாமி) படைபொருதும் பாவனையைத்
வாளி கொடுத்துச (ராமசுவாமி அனுமாரைத் தூதுவிட்டுத்
திருவாழியைக் கொடுத்துச் சீதை சிறை மீட்டாரோ?

(38)

பாலன் உடையான், பசித்தழுருன் தொப்பைக்குப்
பால்பசுக்கள் நூறும்; பணப்பசுக்கள் ஆயிரமாம்;

மேய்க்க இடையனும்; விட்டோட்டச் சேவகனும்;
காக்கச் சிறுபிள்ளையாம்; கன்றுகட்டத் தாதிகளாம்;
உட்கார்ந்து மோர்கடைய முக்காலி பொன்னாலே;
நின்று மோர்கடைய நிலைமத்துப் பொன்னாலே;
சாய்ந்து கொண்டு மோர்கடையச்சார்மணையும் பொன்னாலே
ஏன்தான் அழுறியோ? என்னுடைய கண்மணியே,
அழாதே குழந்தாய், அப்பிச்சி தட்டித்தரேன்;
தூங்கு குழந்தாய், தோசைவார்த்து நான்தாரேன்;
ஆராரோ ஆரிரரோ, ஆராரோ ஆரிரரோ!

39

பூவிரிச்ச கட்டிலிலே, கண்ணே, உன்னைப்
பூச்சி வந்து கடிச்சிருச்சோ?
குடைக்கும் கீழே படுத்த உன்னைக் - கண்ணே,
கொசுவந்து கடிச்சிருச்சோ?
பஞ்சணைமேல் படுத்த உன்னைக் - கண்ணே,
பல்லிபய முறுத்திடுச்சோ?
பச்சைக்கிளி, பட்டுக்கிளி, - கண்ணே நீ
பயப்படாதே பல்லிக்கெல்லாம்.
பஞ்சவர்ணப் பட்டுக்கிளி, - கண்ணே நீ
படுத்துத் தூங்கு பயம் இல்லையே?

40

பெட்டகமே, தாராவே, கூவும் புறுஇனமே,
பாகுதனி லேசமைஞ்ச பஞ்சாமிர்தம்தானே,
தேனே, ரசமே, தெவிட்டாத செங்கரும்பே,
மானேஎன் கண்ணே வயிரமணிப் பெட்டகமே!

(41)

மதுரைக் கதிபதியோ, (என்கண்ணே நீ) வாசலுக்கு
மந்திரியோ;
மதுரை இருகாதம், வாழ்மதுரை முக்காதம்;
மதுரைக்குத் தெற்கே மழைபெய்யாக் கானலிலே

தரிக கிடக்குதுன்னு (மீனாட்சியம்மன்) தரிச்சம்பா
நெல்விதைச்சாள்;
கட்டுக் கலம்காணும்; கதிர் ஒழக்கு நெல்காணும்;
முடிகுறுணி காணு முன்னெ (மீனாட்சியம்மன்) பதிஎழுதித்
தந்தாளே,
அம்மிபோல் களங்கூட்டி ஆனைகொண்டு சூடடிச்சு
மாமன் பொலிதூத்த மச்சினன்மார் கோட்டைகட்டக்
கோட்டைக்குச் சீட்டெழுதக் குமாரன் பொறந்தானே?
வைகை உடைப் பெடுக்க (சொக்கர்) வாதுக்கு மண்சுமந்து
முன் தூணும் பின்தூணும் (மீனாட்சியம்மனுக்கு) முன்னே
கொடிமரமாம்,
பொன்தூண் அசையுதடி, (மீனாட்சியம்மன்)புள்ளைநாட்டுவது
முத்துச் சங்கூத (மீனாட்சியம்மன்) முடிமேல் நிலா அடிக்கப்
பவளச்சங்கூத (மீனாட்சியம்மன்) பார்வதியாள் பந்தடிக்கத்
தங்க வளையோடித் தமரிட்டே தூண்நிறுத்தி,
வெள்ளி வளையோடி மேகவானத் தோட்டில்கட்டி
ஆடுமாம் தொட்டில்; அசையுமாம் பொன்னூஞ்சல்;
காத்தடிக்கும் நேரமெல்லாம் கலகலக்கும் கர்ணன்தொட்டில்
அக்கக்கா பொய்குருவி, அந்திப்பட்டால் எங்கடைவாய்?
குணமுள்ள மீனாட்சி கோபுரத்தின்மேல் அடைவேன்;
கடலரசு பவளமலை, கண்கொள்ளா ரெங்கபதி,
நிலையரசு வேணுமுன்னு நின்னுதவம் பெத்தோமே;
பிள்ளைஇல்லை இன்னு சொல்லி (என்அரசே) தில்லைவனம்
போகையிலே;
தில்லைவனம் கண்திறந்து புள்ளைமிடி திர்ந்தரசோ?

அமுத நிலையம்